ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை.

| மலர் 33 | நவம்பர் 1969 | இதழ் 11 |
|---|---|---|

# சீர்திருத்தக் குழுவினரின் சிந்தனைக்குச் சில சொற்கள்

உதவிபெறும் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைப்பதற்கான ஆய்வுரைகளைத் தருவதற்காகத் தமிழக அரசு அண்மையில் ஒரு குழுவினரை நியமித்தது அல்லவா? அந்தக் குழுவினர், இருபத்தி மூன்று கேள்விகளை அமைத்து, இந்த இருவகைக் கல்வி நிலையங்களோடு தொடர்புடைய அனைவரும் அவற்றிற்கு விடை அளிக்கலாம் என்று தெரிவித்து, ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கேள்விகள், ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பள்ளிகளின் நிர்வாகக் குழுக்கள் பற்றிய கேள்விகள் முதற் பகுதியிலும், பள்ளிகளின் அங்கீகாரம் பற்றிய கேள்விகள் இரண்டாம் பகுதியிலும் அமைந்துள்ளன. ஆசிரியர்களின்

நியமனம், பதவி உயர்வு, ஊழியம் பற்றிய விதிகள் முதலியவை பற்றிய கேள்விகள் மூன்றும் பகுதியிலும், பணியாற்றும் காலத்திலும் ஓய்வு பெறும் காலத்திலும் ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் மற்றும் பிற வசதிகள் பற்றிய கேள்விகள் நான்காம் பகுதியிலும் தரப்பட்டுள்ளன. பாடசாலைகள் பற்றிய இப்போதைய விதிகள் சட்டமாக மாற்றப்பட வேண்டுமா என்பது பற்றிய கேள்வி ஐந்தாம் பகுதியிலும், ஆசிரியர்களின் ஒழுக்க விதிகள் பற்றிய கேள்வி ஆறும் பகுதியிலும், பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களல்லாத பிறவகை ஊழியர்களின் பணிநிலை பற்றிய கேள்வி ஏழாம் பகுதியிலும் அமைந்துள்ளன.

**பள்ளிக்கூடத்தின் நிர்வாகக் குழு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்று நீர் கருதுகிறீர்?**

சீர்திருத்தக் குழுவினர் எழுப்பியுள்ள முக்கியமான கேள்விகளில் ஒன்று இது.

தமிழ் நாட்டில் உள்ள உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளின் தோற்றத்தையும் அமைப்பையும் ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் பெரும்பாலானவை, குறிப்பிட்ட சமயப் பிரிவினரால் அல்லது குலத்தினரால் தொடங்கப்பட்டவை என்பது நன்கு விளங்கும். அவற்றில் சில பள்ளிகள், கிறித்தவ சமயத்தின் கத்தோலிக்கப் பிரிவினராலும், சில, புராடஸ்டன்ட் பிரிவினராலும் நடத்தப்படுபவை. சில பள்ளிகள் இஸ்லாமிய சமுதாயத்தவரால் நடத்தப்படுபவை. சில, சமண சமயத்தவரால் நடத்தப்படுகின்றன. ஹிந்து உயர்நிலைப் பள்ளி, ஹிந்து தியாலாஜிக்கல் பள்ளிமுதலியன பொதுவாக ஹிந்துசமயத்தின்பெயராலும், தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளி, நாடார் உயர்நிலைப் பள்ளி, செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி முதலியன குறிப்பிட்ட குலத்தினர் பெயராலும் நடத்தப்படுகின்றன. சர். எம். சிடி. முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி உயர்நிலைப் பள்ளி முதலிய பள்ளி நிறுவனர்கள் பெயரால் அமைந்துள்ளன.

கிறித்தவப் பள்ளிகளின் நிர்வாகக் குழுக்கள், அவற்றை அமைத்து நடத்தும் சமய நிறுவனங்களின் விதிகளின்படி உருவாகிப் பணியாற்றி வருகின்றன. ஏனைய பள்ளிகளின் நிர்வாகக் குழுக்கள், இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்படி அல்லது சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்படி அல்லது நீதி மன்றங்கள் உருவாக்கிக் கொடுத்த அமைப்பு விதிகளின்படி அல்லது அப்பள்ளிகளைத் தோற்றுவித்த நிறுவனர்களின் டிரஸ்டி பத்திரங்கள் எனப்படும் பொறுப்பு ஆவணங்களில் தரப்பட்டுள்ள விதிகளின்படி அமைக்கப்பட்டுப் பணிபுரிந்து வருகின்றன. எடுத்துக் காட்டாக, சென்னையிலும், சிதம்பரத்தி லும் காஞ்சிபுரத்திலும் பணியாற்றி வருகிற பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிகள், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சென்னை உயர்நீதி மன்றத்தால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு முறைப்படி ஏற்பட்டுள்ள அறநிலையக் குழு ஒன்றினால் நிர்வகிக் கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக, உதவிபெறும் பல்வேறு உயர்நிலைப் பள்ளி களின் நிர்வாகக் குழுக்கள் பல்வேறு முறைகளில் அமைக்கப் பட்டிருந்தாலும், அவை ஒவ்வொன்றிற்கும், திட்டவட்டமான வரையறுக்கப்பட்ட—தெளிவும் திறமும் மிகுந்த அமைப்பு முறைகளும் விதிகளும் இருக்கின்றன. அம் முறைகளின் படியும் விதிகளின்படியுமே அவை பணியாற்றி வருகின்றன.

உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகக் குழுக்கள், நீண்ட நெடுங்காலமாக அவற்றை எழிலும் ஏற்றமும் மிக்கமுறை யில் நிர்வாகம் செய்து வருகின்றன. அக்குழுக்களின் அயராத உழைப்பாலும் தளராத ஆர்வத்தாலும். சின்னஞ்சிறு அளவில் எளிய நிலையில் தொடங்கப்பட்ட பல உயர்நிலைப் பள்ளிகள், நாளடைவில் ஓங்கி உயர்ந்து சிறந்து வளர்ந்து, பெரும் பெரும் கட்டிடங்களும் ஏராளமான வசதிகளும் ஆயிரம் இரண்டாயிரம் என்னும் எண்ணிக்கையில் மாணவர்களும் கொண்டனவாக ஒளி வீசித் திகழ்கின்றன.

அரசாங்கத்தினரும் நகராட்சி மன்றங்கள் முதலிய உள் ளாட்சி மன்றங்களும் உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்கி நடத்

துவதற்கு நீண்ட பல ஆண்டுகளுக்கு முன்னரே பற்பல தனி யார் உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன, தொடங்கி சீரும் சிறப்பும் செறிந்தவகையில் நடத்தப்பட்டன; நடத்தப் பட்டு நாட்டு மக்களின் அன்பையும் ஆதரவையும் மட்டுமல்ல, பாராட்டையும் புகழுரையையும் பெற்று உயர்ந்தன. தமிழகத் தில் உயர்நிலைக் கல்வியைப் பரப்புவதில் இவை ஆற்றிய தொண் டும் ஆற்றிவரும் பணியும் பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்க சிறப்புடையவை என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

அரசினரால் நடத்தப்படுகிற உயர்நிலைப் பள்ளிகள், உள் ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தைவிடத் தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியின் தரம் மிக உயர்ந்தது என்பது, பொதுமக்களாலும் பெற்றோராலும் மன மார ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. அதுமட்டுமல்ல, கல்வி அதிகாரிகளாலும் அமைச்சர் பெருமக்களாலும் பல முறை ஒப்புக்கொள்ளப்பட்டு, பொதுக் கூட்டங்களிலும் சட்டமன்றத் திலும் எடுத்துக் கூறப்பட்ட உண்மை.

இவ்வளவு சிறப்பும் செம்மையும் மிகுந்த முறையில் தனி யார் உயர்நிலைப் பள்ளிகளை நடத்திவரும் நிர்வாகக் குழுக்களின் இப்போதைய அமைப்பு முறைகளை மாற்றி அமைப்பதற்கு நியாயமான காரணம் எதுவும் இருப்பதாக நமக்குத் தெரிய வில்லை. இக் குழுக்களில் அரசாங்கம் தலையிட்டு இவற்றின் உறுப்பினர்களையோ பள்ளி நிர்வாகிகளையோ மாற்ற முயல்வது அல்லது கட்டுப்படுத்துவது, சிறிதும் தேவையில்லாத ஒன்று என்பதே நம் திட்டவட்டமான கருத்து. இக் குழுக்கள் சிறப் பான வகையில் பணியாற்றாவிட்டால் அல்லவா இவற்றைத் திருத்தி அமைப்பதுபற்றி எண்ணிப் பார்க்க வேண்டும்? இவை தாம், கல்வியோடு தொடர்புடைய அனைவரின் புகழ் மாலைகளுக்கும் உரியனவாக, எழில்மிகு முறையில் பணிபுரிந்து வருகின்றனவே! இந் நிலையில் அவற்றை ஏன் மாற்ற வேண்டும்?

தன்னுடைய பொறுப்புகளைச் சிறந்த முறையில் நிறை

**வேற்றமுடியும் என்பதற்கு உத்தரவாதமாகப் பள்ளி நிர்வாகக் குழு எந்த அளவு நிதிகளைப் பெற்றிருக்க வேண்டும் ?**

*சீர்திருத்தக் குழுவினரின் மற்றொரு கேள்வி இது.*

*உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள், உதவிபெறும் தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர் களின் ஊதியம் முழுவதையும் அரசாங்கமே மானியமாகத் தந்து விடுகிறது. இந் நிலையில் பள்ளி நிர்வாகக் குழுக்கள் பெரிய அளவில் நிதி உத்தரவாதம் இருந்தாக வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருக்குமானால், அது சிறிய அளவின தாக—நிர்வாகக் குழுவினரால் எளிதில் திரட்டக்கூடிய அளவின தாக இருத்தல் வேண்டும்.*

*தமிழகத்தில் புதிதாகத் தொடங்கப்படும் உதவிபெறும் தொடக்கப் பள்ளி ஒவ்வொன்றிற்கும், அதன் நிர்வாகக் குழுவி னர், இருபதாயிரம் ரூபாயை வைப்புத் தொகையாகக் காட்ட வேண்டும் என்று அண்மையில் அரசினர் ஓர் அறிக்கை வெளி யிட்டுள்ளனர். இந்த ஆணை, தேவையற்றது—பொருத்தமற் றது—நியாயமற்றது என்பது நம் கருத்து. இப்போது பிறப் பிக்கப்பட்டுள்ள இந்த ஆணை இதற்கு முன்னால் இருந்திருந்தால், தமிழகத்தில் இப்போது செழித்து வளர்ந்து சிறப்புடன் பணி யாற்றிவருகிற பல்லாயிரக்கணக்கான உதவிபெறும் தனியார் தொடக்கப் பள்ளிகளின் பெரும்பாலானவை, தோன்றியே இருக்கமாட்டா.*

*இதில் துளியும் ஐயமில்லை. எப்பாடு பட்டேனும் கல்வியை வளர்க்க வேண்டும் என்னும் பொது நல ஆர்வம்—தொண்டு உணர்ச்சி— அறநெறிப்பற்று ஆகியவற்றின் விளைவாகத் தொடங் கப்படுவதுதான் ஒரு தொடக்கப் பள்ளியே தவிர வாணிப நோக்குடன் தொடங்கப்படுவது அன்று தொண்டு உணர்வின் அடிப்படையில் தொடங்கப்படுகிற ஒரு கல்வி நிறுவனத்திற்கு இருபதாயிரம் ரூபாய் வைப்புப் பணம் காட்டப்பட வேண்டும் என்றால், அது எளிதில் இயலக்கூடிய செயலா? இந்த ஆணை தொடர்ந்து நடைமுறையில் இருக்குமானால், தனியார் தொடக் கப் பள்ளிகள் புதிதாகத் தோன்றுவது அத்திபூத்தாற்போலத்*

தான் அபூர்வமாக அமையமுடியும். தொடக்கக் கல்வியின் விரைவான வளர்ச்சியை இந்த ஆணை தடுத்து நிறுத்துகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த ஆணையை அகற்றிவிடுவது, உடனடியாகச் செய்யப்பட வேண்டிய இன்றியமையாத செயல் என்பதைச் சீர்திருத்தக் குழுவினர் அழுத்தத் திருத்தமாக எடுத்துக்கூற வேண்டும் என்பது நம் ஆசை.

**ஆசிரியர்களின் ஊதியத்தை, பள்ளி நிர்வாகக் குழுக்களின் வாயிலாகத் தராமல் அரசாங்கம் நேரிடையாக ஆசிரியர்களுக்குத் தந்துவிடலாமா ?**

*சீர்திருத்தக் குழுவின் கேள்விகளில் இதுவும் ஒன்று.*

*நேரிடையாகத் தருவது கூடாது—நிச்சயமாகக் கூடாது என்பதே நம்முடைய விடை. நேரிடையாகத் தருகிற முறையால் நிர்வாகக் குழுவினருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நல்லுறவு கெடும். பள்ளிக்கூடக் கட்டுப்பாடு சீர்குலையும். சச்சரவுகளும் பூசல்களும் பிறக்கும். இப்போது உள்ள முறையே அதாவது—நிர்வாகக் குழுக்களின் மூலமாக ஆசிரியர்கட்கு ஊதியம் தரப்படும் முறையே சாலச் சிறந்தது. இம்முறையே தொடர்ந்து கையாளப்பட வேண்டும். இதனை மாற்றவேண்டிய அவசியம் துளியும் இல்லை.*

**ஆசிரியர்களை நியமித்தல்—அவர்களுக்குப் பதவி உயர்வு அளித்தல் ஆகியவை இப்போது பள்ளி நிர்வாகக் குழுக்களின் அல்லது நிர்வாகிகளின் முழு அதிகாரத்திற்கு உட்பட்டவையாக உள்ளன. இந்த ஏற்பாடு இதேவகையில் நீடிக்கலாமா அல்லது இதில் ஏதாவது மாறுதல் தேவையா ?**

*சீர்திருத்தக் குழுவினரின் மற்றொரு கேள்வி இது.*

*எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி, இப்போது உள்ள ஏற்பாடு தொடர்ந்து நீடிப்பதே நியாயம். இந்த ஏற்பாடு தொடர்ந்து நீடித்தால்தான் பள்ளிக்கூடங்களில் கட்டுப்பாடு நிலவும். தரமான கல்வியை ஒழுங்கான முறையில் அளிக்க முடியும். ஆசிரியர்களை நியமிக்கும் உரிமை முழு அளவில்*

நிர்வாகிகளிடமிருந்து இருந்தால்தான் ஆசிரியர்களிடமிருந்து அவர்களால் தக்கபடி வேலையை வாங்கமுடியும்.

**ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே எழுகிற தகராறுகளை எந்த முறையில் தீர்க்கலாம்?**

*சீர்திருத்தக் குழுவின் முக்கியமான கேள்விகளில் இதுவும் ஒன்று.*

*பாடசாலைகளிற் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களுள் மிகப் பெரும்பாலோர், தங்கள் திறமை முழுவதையும் பயன்படுத்தி, மிகச் சிறந்த கல்விப் பயிற்சியை அளித்துவருகின்றனர். எழுத்தை அறிவித்தவன் இறைவன் ஆவான் என்னும் ஆன்றோர் அமுத மொழி அவர்களைப் பொறுத்தவரை அப்பழுக் கற்ற உண்மையாக அமைந்துள்ளது. நாடும் மக்களும் அவர் களுக்குத் தலை தாழ்த்திக் கை குவித்து வணக்கமும் நன்றியும் செலுத்துவது இயற்கை. ஆனால் ஆசிரியத் தொழிலுக்குத் திசை தெரியாமல் தவறி வந்துவிட்ட இரண்டொருவர் தங்கள் கடமையை ஒழுங்காக ஆற்றுவதில்லை; அரசாங்கம் கொடுக் கும் பணத்திற்குப் பலன் உள்ள வகையில் பணி புரிவதில்லை; அப்படிப் பணியாற்றும் ஆசிரியர்களையும் ஒழுங்காகப் பணி யாற்ற விடுவதில்லை. அனாவசியமான சண்டை, சச்சரவுகளை உண்டாக்கிக் கொண்டு, கட்டுப்பாட்டைச் சீர்குலைப்பதிலும், பள்ளிக்கூடத்தின் நற்பெயரைக் கெடுப்பதிலும் அத்தகையோர் தங்கள் கவனத்தை வீணாக்கிக் கொள்கின்றனர். பள்ளி நிர்வாகி கள் அத்தகைய ஆசிரியர்களுக்குச் சட்டப்படி மூன்றுமாத நோட்டீஸ் கொடுத்து நீக்கினாலும், சில சமயங்களில் கல்வி அதிகாரிகள் அவர்களை மீண்டும் வேலைக்கு வைக்கும்படி வற் புறுத்துவதால் பள்ளிக்கூடத்தின் கட்டுப்பாடு குலைந்து விடு கிறது. இத் தொடர்பில் ஒரு கல்வி அதிகாரி கொடுக்கும் தீர்ப்பை எதிர்த்து மனுச் செய்து கொள்வதானால், அந்த மனுவை ஏற்று விசாரித்து மறுதீர்ப்பு அளிப்பதற்கு உரியவர் இன்னோர் உயர்தர கல்வி அதிகாரி என்பது இப்போது உள்ள ஏற்பாடு. இந்த ஏற்பாடு பொருத்தமான ஏற்பாடாக இல்லை.*

அரசாங்கத் துறை எதுவாகயிருந்தாலும், அந்தத் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஒரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டால் அதே துறையைச் சேர்ந்த மற்ருேர் அதிகாரி, பெரும்பாலான சமயங்களில், அந்தத் தீர்ப்பு நியாயமானது என்னும் கருத்தையே தெரிவிக்க விழைகிருர்.

அந்தத் தீர்ப்பு நியாயமற்றது என்னும் கருத்தைத் தெரிவித்துவிட்டால் அதிகாரிக்கு அதிகாரி காட்டிக்கொடுத்ததாக ஆகிவிடும் என்னும் ஒரு தவருன மனப்போக்கு மிகப் பல அதிகாரிகளிடம் அமைந்திருக்கிறது. எனவேதான் ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் எழுகிற, தகராறுகள் பற்றிய அப்பீலை ஏற்றுக் கொள்வதற்குரிய அலுவலராக மற்ருேர் கல்வி அதிகாரி இருக்கும் இப்போதைய ஏற்பாட்டிற்குப் பதிலாக, அரசாங்கத்திற்கு (கல்வி மந்திரி) யிடம் அப்பீல் செய்து கொள்ளவும், அங்கும் நீதி கிடைக்காவிட்டால், பிறகு ஓய்வு பெற்ற ஒரு கல்வி அதிகாரி, நிர்வாகிகள் சங்கத்தைச் சேர்ந்த ஒரு நிர்வாகி, ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் ஆகிய மூவர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, அப்பீலை விசாரித்துத் தீர்ப்பை அளிக்கும் உரிமையை அந்தக் குழுவிடம் விடலாம் என்பது நம் கருத்து.

---

கூஜாவிலிருந்து வெளியே வந்ததும் மது எத்தனை சத்தமாகப் பேசுகிறது.

—அமெரிக்கா

துரு இரும்பைத்தான் தின்கிறது. பொருமை இதயத்தையே தின்கிறது.

—இத்தாலி

ஒருவன் கடைசியாக இழப்பது நம்பிக்கைதான்,

—ஹங்கேரி

அறிவைவிட தைரியத்திஞல் தான் பெரிய காரியங்கள் சாதிக்கப் படுகின்றன

—ஜப்பான்

# ‘இனியொரு விதி செய்வோம்!’

[ டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ]

✻

*[விவசாயத்துறை நிபுணரான டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் விவசாயப் படிப்பு முடித்து, அமெரிக்காவில் உள்ள அகில உலகிலும் விவசாயத் துறை ஆராய்ச்சிக்குப் பெயர் பெற்ற மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். சென்னையில் விவசாயத் துறை டைரக்டராகப் பணியாற்றியிருக்கிறார். ஆடுதுறை 27 (ADT 27) என்னும் புது ரக நெல் விதையை அறிமுகப்படுத்தினார். பல ஐ. நா. ஆலோசனைக் குழுக்களிலும், மத்திய அரசாங்கக் குழுக்களிலும் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்த இவர், தற்பொழுது வாழை, மற்றும் பழவகைகள் அபிவிருத்திக் கார்ப்பரேஷனின் மானேஜிங் டைரக்டராகப் பணியாற்றுகிறார்.]*

பல ஆண்டுகளாக, வெளி நாட்டுப் பயணங்களில் ஈடுபட்டிருப்பவன் நான். அமெரிக்கா, இங்கிலாந்து, தென் கிழக்கு ஆசிய நாடுகள் என்று ஏறக்குறைய இருபத்திரண்டு நாடுகளுக்கு நான் போய் வந்திருக்கிறேன். நான் சென்ற நாடுகளுள் பலவற்றில், பல சந்ததிகளாகக் குடியேறி வசிக்கும் இந்தியச் சமுதாயத்தினரை நான் பார்த்திருக்கிறேன். வெளி நாட்டுக்காரர்களைவிட, வெளி நாடுகளில் வசிக்கும் இந்த இந்தியர்கள் தான் எனது கவனத்தைப் பெரிதும் கவர்ந்தவர்கள்.

டிரினிடாட், ஜமைகா, சூரினம், குயானா ஆகிய தேசங்களில் எண்ணற்ற இந்திய மக்கள் வாழ்கின்றனர். உருவ அமைப்பினால் அவர்களை இந்தியர்கள் என்று சொல்லலாமே தவிர, உடைகளால் பழக்க வழக்கங்களால் மொழியினால் அவர்கள் இந்தியர்கள் அல்ல. அது மட்டுமா? பழமையான இந்தியக் கலாசாரத்துக்கும், அவர்களுக்கும் இடையில் தொடர்பே அற்றுப் போய் விட்டது.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு டிரினிடாட் நாட்டில் ஒரு டாக்ஸியில் பயணம் செய்து கொண்டிருந்தேன். டாக்ஸி டிரைவர் ஓர் இந்தியர் என்று எனக்குத் தெரியும். அதே போல் நானும் இந்தியன் என்று அவருக்குத் தெரியும்.

“உங்கள் பெயர் என்ன?” என்று கேட்டேன். ‘சூரினென்’ என்று பதில் வந்தது. “புதுமையான பெயரா?” என்று கேட்

டேன். "அப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால், எனக்குத் தெளிவாகத் தெரியாது" என்றார் டாக்ஸி டிரைவர்.

இந்திய மக்கள் வசிக்கும் ஒரு பகுதிக்குச் சென்றதும் முதலில் ஒரு பெரியவரைச் சந்தித்து, 'சூரினென்' இந்தியப் பெயரா?" என்று கேட்டேன்.

"ஆமாம். சூரிய நாராயணன் என்ற பெயர்தான் இப்படி ஆகிவிட்டது" என்றார் அவர். இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்தியக் கலாசாரத்துக்கும், இந்த மக்களுக்கும் இடையில் தொடர்பு இல்லாமல் அறுபட்டு விட்டதென்றாலும், இந்தக் கலாசாரத்தின் மெல்லிய வேர் மட்டும் இந்த மக்கள் மனங்களில்—வாழ்க்கையில் ஊடுருவி யிருக்கிறது அல்லவா!

டிரினிடாட் நாட்டில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பொழுது நான் மற்றொன்றையும் கண்டேன். 'ஹைவே' என்று சொல்லப்படும் நெடுஞ்சாலைகளில், இரண்டு புறங்களிலும் இந்தியர்களின் வீடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டின் முன்னாலும், உயரமான பத்துப் பதினைந்து கம்பங்களில் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. "இதெல்லாம் என்ன கொடிகள்?" என்று அதே டிரைவரிடம் கேட்டேன்.

"ஒவ்வொரு குடும்பத்தினரும் வருஷத்துக்கு ஒரு முறை வீட்டில் பூஜை செய்வார்கள். அந்தப் பூஜைக்கும் பக்கத்து வீட்டுக்காரர்களையும், உறவினர்களையும் அழைப்பார்கள். ஒவ்வொரு வருஷமும் பூஜை முடிந்ததும், ஒவ்வொரு கொடியைப் பறக்க விடுவார்கள்" என்றார் அவர்.

அவர்கள் வணங்குவது நமது தெய்வங்களைத்தான். 'நாம் இந்தியர்கள்' என்ற உணர்வு மட்டும் அவர்களது மனங்களில் நூலிழை போல் மென்மையாக ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த உணர்வினைப் பலப்படுத்தி, தொடர்பற்றுப்போய் விட்ட இந்தியக் கலாசாரத்தோடு தங்களை மீண்டும் பின்னிப் பிணைத்துக் கொள்ள அவர்கள் மிகவும் விரும்புகிறார்கள்.

## 'விக்டோரியா' ஹனுமான்!

போர்ட்டோரி கோவிலிருந்து டிரினிடாட்டுக்கு விமானத்தில் போய்க் கொண்டிருந்தேன். நியூயார்க்கில் மருத்துவப் படிப்பு படிக்கின்ற பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தி என்னோடு பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். அவள் ஓர் இந்தியப் பெண். பெற்றோர் வசிப்பது குயானா என்னும் நாட்டில்.

"உன் பெயர் என்னம்மா?" என்று கேட்டேன்.

"விக்டோரியா ஹனுமான்" என்றாள் அவள். எனக்கு வியப்பாக இருந்தது. அவளுடைய தந்தையின் பெயர் ஹனுமான். ஆனால் 'விக்டோரியா' என்னும்

கிறித்துவப் பெயர் எப்படி வந்தது? அதற்கு, அந்தப் பெண் கூறிய காரணத்தை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

பிரசவத்தின் பொழுது மருத்துவம் பார்க்க வந்த நர்ஸ்—கிறித்துவ நர்ஸ்—பெண் குழந்தை பிறந்ததும், 'விக்டோரியா' என்று பெயர் வைத்து விட்டுப் போய் விட்டாள். அதுவே நிலைத்து விட்டது. இந்தியக் கலாசாரத்தின் தொடர்பு அற்றுப் போய், மேலை நாட்டுக் கலாசாரம் எப்படி அவர்களை ஆக்ரமித்துக் கொண்டது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

பிற நாட்டு மக்களிடம் நாம் நமது கலாசாரத்தைப் பரப்ப வேண்டாம். ஆனால் அங்கேயுள்ள நம் மக்களிடத்திலாவது நமது கலாசாரத்தை வளர்க்க வேண்டாமா?

அங்கே ஒரு பெரியவர் இதைத்தான் சொன்னார். "இந்தியக் கலாசாரத்துடன் எங்கள் தொடர்பினை நாங்கள் பலப்படுத்திக் கொள்ளத்தான் விரும்புகிறோம். ஆனால் அதற்கு ஊக்கமளித்து ஈடேற்றும் வகையில் இந்திய மக்கள் எங்களுக்கு உதவி செய்யக் காணோமே! இந்தியாவிலிருந்து யாரேனும் அடிக்கடி வந்து எங்களோடு தொடர்பு கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்றார் அவர்.

அந்த முறை நான் இந்தியா திரும்பியதும் ராமகிஷ்ண மிஷனைச் சேர்ந்த ஒரு பெரியவரைச் சந்தித்து இது பற்றிக் கூறினேன். அதற்கு அவர், "செய்யலாம், ஆனால் அதற்கேற்ற பண வசதியும், வாய்ப்பும் எங்களுக்கு இல்லையே! மேலும் இத்தகைய காரியங்களுக்கு யார் வரப் போகிறார்கள்" என்று பதிலிறுத்தார்.

சில நாடுகளில் உள்ள பெரும் பணக்காரர்கள், தங்கள் மதத்தையும், கலாசாரத்தையும் வெளிநாடுகளில் பரப்புவதற்காகக் கோடி கோடியாகப் பணத்தைச் செலவழிக்கிறார்கள். அத்தகைய பணக்காரர்கள்—இந்தியக் கலாசார அபிமானிகள்—நம் தேசத்தில் இல்லையா? "அந்தப் பணியை எங்களிடம் கொடுங்கள்: நாங்கள் செய்கிறோம்" என்று முந்திக் கொண்டு வரக்கூடிய நண்பர்கள்—குறிப்பாக இளைஞர்கள் நம் நாட்டில் இல்லையா? என்ற கேள்விதான் என் உள்ளத்தில் எழுகிறது.

இவ்வாறு வெளி நாடுகளிலுள்ள நம் மக்களிடத்தில் கலாசாரத்தைப் பரப்புவதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ளாததன் விளைவாக, நம்மைப்பற்றி அந்த வெளி நாட்டினர் மிகவும் தவறாகவும் நினைத்துக் கொள்கிறார்கள்.

எனது நண்பர் ஒருவர் பெல்ஜியம் நாட்டில் டெலிவிஷனில் இந்தியாவைப் பற்றிக் காட்டிய ஒரு நிகழ்ச்சியைக் கூறினார். ஒரு நிகழ்ச்சியில், எலிகள் நமது தானியங்களைத் தின்பது போல் காட்டுகிறார்களாம். அடுத்த நிகழ்ச்சியில் எலி

மேல் அமர்ந்திருக்கும் பிள்ளையாரைக் காட்டி, இந்திய மக்கள் எலியை வணங்குகிறார்கள் என்று சொல்லுகிறார்களாம். அவர்கள் மேல் தவறில்லை. 'நாம் வணங்குவது எலியை அல்ல, பிள்ளையாரைத் தான்' என்று நமது பக்தி வழிபாட்டைப் பற்றி நாம் அவர்களுக்குப் போதுமான அளவு விளக்கவில்லையே !

## கருணை உள்ளத்தைக் காண்பீர் !

ஒரு முறை ஸ்பெயின் நாட்டுத் தலைநகரான 'மாட்ரிட்' நகரில் இந்தியத் தூதரக உயர் அதிகாரியுடன் உணவு அருந்திக் கொண்டிருந்தேன். அவரது வேலைக்கார அம்மாள் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவள், நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது அந்தப் பெண், "நேற்று எங்கள் மாதா கோவில் பிரார்த்தனை முடிந்ததும், பாதிரியார், இந்தியாவைப் பற்றிப் பேசினார். 'அங்கே தானியங்களை யெல்லாம் மாடுகள் தின்று விடுகின்றன. ஆனால் அந்த மாடுகளை இந்தியர்கள் சாப்பிடாமல் பட்டினி கிடக்கிறார்கள்...வெளி நாடுகளிடம் உதவி கேட்கிறார்கள். நம்மில் ஒவ்வொருவரும் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும்' என்று கூறினார்" என்றாள்.

நான் அந்தப் பாதிரியாரின் அறியாமையை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டேன். 'பசி, பட்டினியோடு இருந்தாலும் சரி,—பசுவைக்கொன்று, அதனுடைய புலாலைத் தின்று, கேவலம் எங்கள் பசியை நாங்கள் தீர்த்துக் கொள்ள மாட்டோம்' என்று நினைக்கக் கூடியவர்களின் உயர்ந்த கருணை உள்ளத்தை அவர் புரிந்துகொண்டு அதற்கு மதிப்பளிக்க வில்லையே என்று வருந்தியதோடு புரிந்து கொள்ளுமாறு நாம் என்னென்ன காரியங்களைச் செய்தோம் என்றும் கேட்டுக்கொண்டேன்.

எனவே நமது மற்றப் பொருளாதார முன்னேற்றங்களைவிட, முதலில் நம்முடைய கலாசாரத்தையும், மரபுகளையும் வெளி நாட்டினருக்கு உணர்த்த வேண்டியது முக்கியம். இந்தப் பணியினை வெளிநாடுகளுக்குப் படிக்கப் போகின்ற மாணவர்கள் தாம் நல்ல முறையில் செய்ய வேண்டும் — செய்ய முடியும்என்று நான் நம்புகிறேன்.

## உற்பத்தி பெருக ஒரு யோசனை

நான் விவசாயத் துறையில் ஈடுபாடு கொண்டவன். எனவே உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழி வகைகளைப் பற்றி முக்கியமான ஒரு கருத்தினைச் சொல்லித் தான் ஆகவேண்டும்.

நெல் உற்பத்தியில் பற்றுக்குறை நாடாக இருந்த ஜப்பான், இன்று உபரி நாடாகத் திகழ்கிறது. விவசாயம் செய்வதற்குத் தேவையான எல்லா வசதிகளும் அங்கு போதிய அளவு கிடைப்பதுடன், அந்நாட்டில் உள்ள கூட்டுறவு இயக்கம் உணவுப் பெருக்கத்துக்குப் பெரும்

[16—ஆம் பக்கம் பார்க்க]

# கிழக்கில் ஒரு மேற்கு

[டாக்டர் சாரதா கதிரேசன்]

*

*திருமதி சாரதா கதிரேசன், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் படித்து டாக்டர் பட்டமும், உடற்கூறு ஆராய்ச்சிப் படிப்பில் எம். எஸ்ஸி பட்டமும் பெற்றவர். மருத்துவத் துறையில் ஆராய்ச்சிப் பயிற்சிக்காக கொழும்புத் திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா சென்று ஓராண்டு படித்தார். தற்பொழுது சென்னை மருத்துவக் கல்லூரியில் உடற்கூறு பேராசிரியையாகப் பணியாற்றுகிறார்.*

'உங்களது முன்னோர்கள் யார்?'

'எங்களது முன்னோர்கள் கைதிகள்.'

'கைதிகளா?'

'ஆமாம், கைதிகள் தான், அவர்கள் எங்கள் முன்னோர்கள் மட்டுமல்ல... காடு மேடாய்க் கிடந்த இந்தக் கண்டத்தைக் கண் கவரும் அழகு நாடாக உருவாக்கிய சிற்பிகள். இங்கிலாந்திலிருந்து ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளாக இங்கே அனுப்பப்பட்டவர்கள், தங்கள் கடினமான உழைப்பினால் இந்த ஆஸ்திரேலியா கண்டத்தை, அதனுடைய செல்வ வளத்தை உலக மக்களுக்கு உணர்த்தினர்.'

எனக்கு அந்தமான் தீவும், இந்தியாவிலிருந்து ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் அங்கே அனுப்பப்பட்டதும் நினைவுக்கு வந்தன.

ஆஸ்திரேலியா என்றதும், ஒருவருக்குக் காடு-கங்காரு-காட்டுத் தீ-இந்த மூன்றும்தான் நினைவுக்கு வரும். உலகத்திலுள்ள ஆறு கண்டங்களில் இதுமிகவும்சிறியது. ஆனால் இதனுடைய நிலப் பரப்போ இந்தியாவைவிட அதிகம். மக்கள் தொகையோ இன்று நம் நாட்டில் இருப்பதில் ஐந்தில் ஒரு பங்கு தான்.

பூமிக்கு அடியில் ஏராளமான கனி வளம் - எல்லையற்ற பரந்த நிலப் பரப்பு - குறைந்த மக்கள் தொகை — மக்களின் உழைப்பு. ஒரு நாடு முன்னேறுவதற்கு இவற்றை விட வேறு என்ன வேண்டும் ?

ஆஸ்திரேலியாவில் இந்த நான்கும் இருக்கின்றன. அத்துடன் இன்னொன்றும் இருக்கிறது; அது தான் அமெரிக்க உதவி. எனவே அந்த நாடு இன்று பொருளாதாரத் துறையில் போதிய முன்னேற்றம் பெற்றுள்ளது

அமெரிக்க உதவி மட்டும் இல்லாவிட்டால், ஆஸ்திரேலியா இவ்வளவு முன்னேறியிருக்க முடி

யாதோ என்று எனக்கு அடிக்கடி சந்தேகம் ஏற்பட்டதுண்டு. அமெரிக்கர்களைப் போலவோ ஜப்பானியர்களைப் போலவோ ஆஸ்திரேலியர்கள், அவ்வளவு கடினமாக உழைப்பவர்களாக எனக்குத் தெரியவில்லை. இந்தியாவில் இருப்பது போல் அங்கு ஐம்பது கோடி அறுபது கோடி என்று ஜனத்தொகை மட்டும் இருந்தால், ஆஸ்திரேலியா இன்னுமோர் இந்தியாவாக இருக்குமோ?

## ஆஸ்திரேலியாவும் ஓர் இந்தியாவா ?

அது கிழக்கத்திய திசையிலுள்ள ஒரு நாடு. ஆனால் அங்கு இருப்பதோ முழுக்க முழுக்க மேற்கத்திய நாகரிகமும் - கலாசாரமும் ஆகும். இரவு விடுதிகள், மது வகைகள், சமுதாய நெறிகள் எல்லாம் மேற்கத்திய வார்ப்படங்கள்தாம். ஆனால் வேறு சில தனிப்பட்ட அம்சங்களும் இந்த மக்களிடத்தில் காணப்படுகின்றன.

'போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று நாம் சொல்லுகிறோமல்லவா? அதை இந்நாட்டினர் கடைப் பிடிக்கிறார்கள் போலும்! தொழில் சட்டம் என்ற பெயரில் மாலை ஐந்தரை மணிக்கே கடைகளை மூடி வியாபாரத்தையும் நிறுத்திக் கொண்டு போய் விடுகிறார்கள்.

அரசியல் விழிப்புணர்ச்சி அவ்வளவாக இல்லாதவர்கள் ஆஸ்திரேலியர்கள். நான் அங்கு தங்கியிருந்தபொழுது ஒரு தேர்தல் நடந்தது. தேர்தல் நடந்த மறு நாள், மற்றவர்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். அந்த அளவுக்குச் சற்றும் முக்கியத்துவம் இல்லாத ஒரு நிகழ்ச்சியாக அது இருந்தது. ஏனெனில் அரசியலைப் பற்றி அவர்களுக்கு அவ்வளவாகக் கவலை இல்லை. வளமாக வாழ்வதற்கு வசதி இருப்பதால் வேறு எதைப்பற்றியும் அவர்கள் சிந்திப்பதில்லை. 'ராமன் ஆண்டா லென்ன? ராவணன் ஆண்டாலென்ன' என்ற மனப் போக்குதான்.

ஆஸ்திரேலியா நாட்டில் உள்ள பெண்களின் நிலைதான் எனக்கு மிகுந்த வியப்பினைத் தந்தது. அரசியலின் பக்கமே அவர்கள் போவதில்லை. அதுமட்டுமல்ல; வேறு எந்தத் துறையிலும் பெரிய தலைமைப் பதவி வகிப்பதற்கு அவர்கள் முன்வருவதுமில்லை அனு–மதிக்கப்படுவதுமில்லை. காரணம்-ஓரளவு படித்தவுடன் நல்ல ஊதியம் வரக் கூடிய வேலை கிடைத்து விடுகிறது. அதற்குப் பிறகு அவர்கள் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையைத் தொடங்கி விடுகிறார்கள்.

## நமக்கு ஒரு பெருமை

நான் படித்த இடத்தில், பல பேராசிரியர்கள் என்னைப்பார்த்துக் கேட்டார்கள்: "நீங்கள் ஒரு பெண்ணாக இருந்த போதிலும், பேராசிரியை பதவி வகிக்க உங்கள் நாட்டில் தடைகள் இல்லையா" என்று. அதற்கு நான்

"எங்கள் தேசிய அரசியல் சட்டத்தின்படி, எந்த ஒரு பதவிக்கும் ஒரு நபரின் தகுதிதான் முக்கியமே அன்றி, வேறு எந்த ஒரு காரணமும் தடையாக இருப்பதில்லை" என்று கூறினேன். உண்மைதானே! அந்த வகையில் இந்தியர்களாகிய நாம் எவ்வளவோ பெருமைப்பட்டுக் கொள்ளலாம். நம் நாட்டில் உள்ள பிரச்னைகள் எத்தனை! பொருளாதாரச் சிக்கல்கள் எத்தனை! உள் நாட்டுப் பூசல்கள் எத்தனை! இருப்பினும், ஆண்-பெண், ஏழை-பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமல் ஒரு வலுவான ஜனநாயகத்தை—சமதர்மத்தை வளர்த்துக் கொண்டு வருகிறோமே! வேறு எந்த நாட்டிலும் இத்தகைய பிரச்னைகள் இருந்தால் நிச்சயமாக இந்தியாவைப்போல் அவற்றால் தாக்குப் பிடிக்கவே முடியாது.

இத்தகைய பிரச்னைகள் ஒன்று கூட ஆஸ்திரேலியாவில் இல்லை. ஆனால், வேறொரு பிரச்னை இருக்கிறது. அதுதான் அங்கேயுள்ள பூர்வகுடி மக்கள் பிரச்னை.

வெள்ளை நிறத்தவர்கள் இங்கு வந்த பின்பு, இங்கிருந்த பூர்வகுடி மக்களை அடக்கி ஒடுக்கி வைத்து விட்டார்கள். இன்றும் அந்த மக்கள் ஏதோ கற்கால மக்களைப் போல் குகைகளிலும், காடுகளிலும் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் யாரும், இந்த மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குச் சென்று பார்க்க அனுமதிக்கப் படுவதில்லை. சமீபகாலமாக, இந்த மக்களுக்கென்று, வெள்ளை நிறத்தவர் அரசாங்கம் பல கல்வி நிலையங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறது. ஆனால், போதிய அளவு மக்கள்தான் வருவதில்லை. பூர்வ குடியைச் சேர்ந்த ஒருவர் நகரங்களில் ஏதேனும் தொழில் செய்ய முடியும் என்றால், அது டாக்ஸி டிரைவர் தொழில்தான்.

இன்னொரு விசித்திரமும் இங்கே இருக்கிறது.

வெளி நாடுகளிலிருந்து சுற்றுப் பயணமாக வருபவர்களை அந்த மக்கள் மிகவும் விரும்பி வரவேற்று உபசரிக்கிறார்கள். ஆனால் ஆங்கிலேயரல்லாத பிறநாட்டினர் இங்கு நிரந்தரமாக வசிப்பதற்கென்று குடியேறிவிட்டால், இம் மக்கள் அவர்களை அவ்வளவாக வரவேற்பதில்லை. ஏனெனில், 'நாளடைவில் பிற நாட்டினர் எண்ணிக்கை அதிகமாகி, நாம் மைனாரிடியாகி விடுவோமோ!' என்ற பயம்தான் காரணம்!

## அன்பு உள்ளங்கள்

'அமெரிக்கர்கள், வெளி நாட்டினரோடு எவ்வளவுதான் பழகினாலும் அந்தப் பழக்கத்தில் ஓர் அன்னியோன்யம் 'இருக்காது' என்று சொல்வார்கள். ஆங்கிலேயர்களோ, அறிமுகம் செய்து வைக்கப்பட்டாலொழிய யாருடனும்பேசிப் பழக மாட்டார்கள்' என்றும் கூறுவார்கள். ஆனால்ஆஸ்திரேலிய மக்களின் குணம் இதற்கு

முற்றிலும் மாறுபட்டது. வெளி நாட்டு மக்களோடு தாமாகவே சென்று பேசிப் பழகுவார்கள். உண்மையாகவும் பழகுவார்கள்.

ஆஸ்திரேலியாவில் இருந்த பொழுது நானும், மேரி என்ற ஆஸ்திரேலியப் பெண்ணும் ஓர் ஓட்டலில் உணவருந்திக் கொண்டிருந்தோம். எங்களுக்கு அருகிலிருந்த நாற்காலியில் ஓர் ஆஸ்திரேலிய மூதாட்டி வந்து அமர்ந்தாள். அவர் என்னுடன் பேச்சுக் கொடுக்க நாங்கள் மூவரும் உண்டு முடித்தோம். அம் மூதாட்டி 'ஒப்பல்' (விலை மதிப்பு உள்ள ஒரு வகைக் கல்) சுரங்கம் ஒன்றில் வேலை பார்ப்பவர். இந்தியர்கள் மேல் தனக்கு ஒருவித அன்பு என்று அவர் கூறினார். நான் அவருடைய அன்புக்கு நன்றி கூறும் பொழுதே அவர் என் கைகளில் எதையோ பத்திரமாக வைத்து விட்டுச் சென்றார். கையைத் திறந்து பார்த்தேன். அழகிய ஒப்பல் கல் அது. இந்திய மக்களுக்கு அவர் கொடுத்த அன்பின் சின்னமோ?

இந்தியர்களை ஆஸ்திரேலியர்கள் மிகவும் விரும்புகிறார்கள். இந்தியாவின் ஜனநாயகமும், பொருளாதாரமும் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். நம்மேல் இவ்வளவு அன்பு காட்டக் கூடிய வெளி நாட்டினர் வேறு யாரும் இருக்க முடியாது என்றுதான் கருதுகிறேன்.

—"ஆனந்த விகடன்"

[13–ஆம் பக்கத் தொடர்ச்சி]

துணையாக இருக்கிறது. தைவான் நாட்டிலும் இப்படித்தான். கூட்டுறவுத் துறையின் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதில் மகத்தான வெற்றி கண்ட நாடு தைவான் இந்நாடுகளில் உள்ள கூட்டுறவு இயக்கத்தை இந்தியாவிலும் பின்பற்றலாம். பின்பற்ற வேண்டும்.

உணவுப்பிரச்னையும்—கலாசாரப் பிரச்னையும் நம்மைப் பொறுத்த வரையில் ஒன்றோடொன்று தொடர்புடையன வாகிவிட்டன. நம்மிடமுள்ள உணவுப்பற்றாக் குறையை வைத்துத்தானே நமது கலாசாரத்தையே தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் மற்றவர்கள்!

'வயிறு நிறைந்தால் உள்ளம் நிறையும்; உயர்ந்த தத்துவங்களும் எழும்' என்பார்கள். இங்கே முன்பு அப்படித்தான் நடந்திருக்கிறது. ஆனால் இடையில் அடிமைத்தனத்தாலும், அதன் விளைவாய்த் தோன்றிய குழப்பங்களாலும் பலருடைய வயிறு பாதிக்கு மேல் நிரம்பாமல் இருக்கிறது. விரைவில் இதனை மாற்ற வேண்டும். பாரதியார் பாடியது போல், இனியொரு விதி செய்ய வேண்டும்.

ஏனெனில் இனியும் இத்தகைய நிலை நீடிக்கவிடுவது, 'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்று எண்ணுகிற நமது கலாசாரத்தற்கு அழகில்லை.

—"ஆனந்த விகடன்"

சிந்தனைக் கதை :

# நெஞ்சப் புகை

தாமரைக்கண்ணன்

தெரு முனையில் நுழைந்ததும் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்ட கேசவன் கால்கள் வேகமாக நடையைக் கூட்டின.

நாள் முழுவதும் பள்ளிக் கூடத்துப் பையன்களுடன் போராடி விட்டு வீட்டுக்குத் திரும்பிய அவன் முகத்தில் சோர்வு படர்ந்திருந்தது.

வீடு நெருங்கியதும்...

இரண்டு விரல்களுக் கிடையில் உதட்டோடு ஒட்டிப்போன சிகரெட்டைக் கடைசி தடவையாக ஒரு 'தம்' இழுத்துக் கீழே போட்டு விட்டு அடித் தொண்டையைக் கரகரத்துக் காறித் துப்பி விட்டுக் கதவைத் தட்டினான்.

''தேவகி!...தேவகி...!''

கதவு திறந்தது.

வானத்து மின்னலே பூமிக்கு இறங்கிவந்து ஓர் பெண் உருவில் சுடர் விடுகிறதா? பால் நிலவைப் போல் மலர்ந்த முகத்துடன் அவன் மனைவி தேவகி அவனைப் புன்முறுவலுடன் வரவேற்றாள்.

உள்ளே நுழைந்ததும் கேசவன் மனம் கிறங்கியது.

'ஓ...! இந்தக் கிளிப் பச்சை நைலான் சேலை உனக்கு எவ்வளவு அழகாக இருக்கிறது, தெரியுமா?''

ஒரு கை அவளுடைய கொடியிடையை வளைத்து அருகில் இழுக்க, மற்றொரு கையால் மலர் முகத்தைத் தன் பக்கம் திருப்பினான்.

''இதென்ன விளையாட்டு, சின்னக் குழந்தை மாதிரி! விடுங்கள். தெருக் கதவு திறந்திருக்கிறது''... தேவகி சிணுங்கினாள்.

''உஸ்......சும்மாயிரு! இதோ பார்...''

அவள் முகத்தோடு அவன் முகம் நெருங்கியது. நாணம் கவிந்து படபடக்கும் அவள் அதரங்களில் அவன் உதடுகள் பதிந்த போது...

அவன் வாயிலிருந்து வெளியேறிய சிகரெட்டுப் புகையின் நாற்றம் 'குப்'பென்று அவள் நாசியில் நெடியேறி நெஞ்சில் கமறியது.

''சே...என்ன நாற்றம், குடலைப் புரட்டுகிற மாதிரி! வாந்தி வருகிறாற் போல் வாயைக் குமட்டுகிறது.''

அவன் முகத்தைக் கையால் தள்ளிவிட்டு அப்பால் நகர்ந்து கொண்டாள், அவள்.

"தேவகி...!"

தூக்கி எறியப்பட்ட ஆசை அலைகளாக் அவன் ஒரு கணம் வெறித்து நின்று, கம்பிய குரலுடன் மீண்டும் அவளை நெருங்கினன்.

"சரிதான், என்னைத் தொடாதீர்கள். சிகரெட்டுப் பிடிக்காதீர்கள் என்று எத்தனை தடவை சொன்னாலும் கேட்பதில்லை. திடீரென்று இந்தக் கொடிய பழக்கம் எப்படியோ உங்களைத் தொத்திக் கொண்டது, சனியன்...அந்த வாய் என்னமாய் நாற்றமடிக்கிறது!"

பாம்பாய்ச் சீறி விழுந்தாள் தேவகி.

"நான்சென்ஸ்...என்ன சொன்னாய்?"

அவள் கன்னத்தில் ஓங்கி அறைவதற்கு உயர்ந்த கேசவனுடைய கை வாயிற்படியின் பக்கம் நிழலாடுவதைக் கண்டதும் தாளுகத் தாழ்ந்து விட்டது.

வாயிற்படி கதவின்மீது...

சினிமா ஸ்டைலுடன் சாய்ந்து கொண்டு வாயில் சட்டைக் காலரின் நுனியைக் கடித்து இழுத்த வண்ணம் அவர்களையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான், பள்ளியிலிருந்து வீடு திரும்பிய அவனுடைய மகன், புகழேந்தி! அவன் தோளில் பலகைப் புத்தகப் பை தொங்கிக் கொண்டிருந்தது.

"ஏம்பா! அம்மாவை அடிக்காமவிட்டுடுங்க..." என்று கேட்டுக் கொண்டே, தந்தையைக் கிண்டல் செய்யும் பாவனையில் ஒயிலாக நடந்துவந்த புகழேந்தி தன் தாயின் கைகளை ஆறுதலோடு பற்றிக் கொண்டான்.

"ம்..." என்று உறுமிய கேசவன் "இங்கேவா, சொல்கிறேன்" என்று மகனைப்பார்வையால் எரித்துவிட்டு வேண்டுமென்றே ஒரு சிகரெட்டை எடுத்து தேவகியின் எதிரிலேயே பற்ற வைத்தான்.

எதிராளியின் மனதைப் புண்படுத்தி அவர்களை அவமானப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு தனக்குத்தானே கெட்டிக் காரத்தனமாகக் குழி வெட்டிக்கொள்ளும் பைத்தியக் காரர்கள் எத்தனையோ பேர் இல்லையா? அவர்களைச் சேர்ந்தவன் அவன்.

"அவன் என்ன சொல்லி விட்டான் என்று அவனை அப்படி முறைக்கிறீர்கள்? நல்லதைச் சொன்னல் அதற்குக் காலமில்லை இது. எட்டு வயசு ஆகிறது இவனுக்கு, நான்காவது படிக்கிறான். பெரியவங்க செய்வதைப் பார்த்து அதையே பின்பற்றிச் செய்யும் வயசுன்னு சொல்லுவாங்க. நீங்க இவன் எதிரிலேயே புகை பிடிச்சு இவனையும் குட்டிச்சுவராக்கிடுங்க" என்று கண் கலங்கிய அவள், "நீ இங்கே இருக்க வேண்டாம்; வாடா" என்று மகனை அழைத்துக் கொண்டு அடுக்களைக்குச் சென்றாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை ஒன்பதுக்கு ஆரம்பித்த சீட்டுக் கச்சேரி மாலை நான்கு வரை திண்ணையில் அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது.

ஆட்டத்தின் நடுவில் எழுந்து உள்ளே வந்து ஜிப்பா பையில் கையைவிட்டு கேசவன், ‘சிவுக்’ கென்று வெளியே இழுத்தான். ஆணியில் மாட்டியிருந்த ஜிப்பாவை எடுத்தான், உதறு உதறு என்று உதறினான். ஜிப்பாவை வெறுப்புடன் மூலையில் வீசி எறிந்தான்.

பிறகு அடுத்த ஜிப்பா...அதற்கடுத்தசட்டை...மற்றொரு ஜிப்பா! ஊகூம் அவன் தேடியது எதிலும் இல்லை.

பெட்டியைத் திறந்து பார்த்தான்; அதிலும் காணவில்லை. தன் அழகிய சுருள் கிராப்பை இரண்டு தடவை சொறிந்து கொண்டு பெட்டியைத் தூக்கித் தாழ்வாரத்தில் எறிந்து விட்டு, ‘தேவகி, தேவகி’ என்று கத்தினான்.

பகல் சாப்பாட்டுக்குக்கூட வராமல் நடந்து கொண்டிருக்கும் இவனுடைய சீட்டுக் கச்சேரியின் கும்மாளமும் சுண்ணாம்புக் காளவாயில் எழுவதைப்போல் அந்தக் கும்பலிலிருந்த எழுந்து வீட்டைச் சுற்றி வளைத்துக் கமற அடிக்கும் புகையும் சகிக்காமல் பின்கட்டுக்குச் சென்று ‘தலைவிதியே’ என்று வெறுந்தரையில் கவிழ்ந்து படுத்துக் கொண்டிருந்ததேவகி எழுந்து வந்து ‘என்ன...ஏது’ என்று அவனைக் கேட்கவில்லை.

நம் கணவன் நாலு பேர் மெச்சும் படியாக ஓர் ஆசிரியனாக இருந்தும், கொஞ்ச நாட்களாக கெட்டுப் போகிறானே என்ற வயிற்றெரிச்சல், அவளுக்கு! தான் கூப்பிட்டதும் அவள் வரவில்லையே என்ற ஆத்திரம், அவனுக்கு!

“விர்”ரென்று கொல்லைப்புறத் தாழ்வாரத்திற்குப் போனான்.

“ஏய் கழுதை! உன்னைத்தான் கூப்பிடுகிறேன்.!”

என் ஜிப்பாவில் இரண்டு சிகரெட்டுப் பாக்கெட்டுகள் வைத்திருந்தேனே...எங்கே, அது?”

“அதென்னவோ எனக்குத் தெரியாது!”

“என்ன விளையாடுகிறாயா? ஒரு வாரமாகவே நீ இப்படித்தான் செய்துகொண்டுவருகிறாய். முதலில் இரண்டு மூன்று சிகரெட்டுகள் இல்லாமல் இருந்தது. இப்போது பாக்கெட்டுப் பாக்கெட்டாகவே காணாமற்போகிறது. இதோ பார். மரியாதையாகச் சொல்கிறேன். நீ இந்த மாதிரியெல்லாம்சிகரெட்டை எடுத்துத் தூர எறிவதாலேயோ அல்லது ஒளிச்சு வைக்கிறதாலேயோ நான் புகை பிடிக்கிறதை விட்டுட மாட்டேன். சிகரெட்டை எங்கே வைத்திருக்கிறாய்...சொல் ...அங்கே ஆட்டம் நிற்கிறது” என்று சினத்துடன் அவசரப்பட்டான், கேசவன்.

“நீங்கள் வச்சிருந்ததே எனக்குத் தெரியாது. அந்தச் சனியனை நான் கண்ணாலும் பார்க்கவில்லை.”

“ஓகோ, அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டாயா, நீ?”

‘பளார்...பளார்’என்று இரண்டு அறைகள் அவளுடைய இடது கன்னத்தல் விழுந்தன.

‘அம்மா...’ என்ற அலறலுடன் கன்னத்தைப் பிடித்துக்கொண்டே கீழே சாய்ந்தாள், தேவகி.

அதுவரை மறைந்து நின்று கவனித்துக்கொண்டு இருந்த புகழேந்தி கையில் முதல் வகுப்புப் புத்தகத்துடன் அங்கே வந்தான்.

"என்னடா...?"

"ஒன்றுமில்லேப்பா! ஆறுவது சினம்...ஆறுவது சினம்'னு நூறு தடவை சொல்லிக் கொடுக்கிறேம்பா! பக்கத்து வீட்டுப் பையன் இல்லே...அவன், 'ஆறுவது சினம்...ஆறுவது சினம்'னு தப்புத் தப்பா சொல்றும்பா. ஏம்பா! ஆறுவது தானேப்பா சினம்...!" என்று நயமாகக் கேட்டான், புகழேந்தி.

"அது ஆறுவது சினமோ ஏழாவது சினமோ! போடா வெளியே" என்று அவன்மீது எரிந்து விழுந்த கேசவன் 'திண்ணைக்கு வந்து வீட்டில் விரும்பத்தகாதது எதுவுமே நடக்காததைப் போல மீண்டும் சீட்டாட்டத்தில் மூழ்கிவிட்டான்.

மணி ஆறு, மாலை மங்கும் நேரம். "ஒரு வாரமாக சட்டையில் வைக்கும் சிகரெட்டுகள் காணவில்லை என்கிறாரே...நாம் அதைத் தொட்டுப் பார்த்ததுகூட இல்லையே ஒரு வேளை...ஒரு வேளை...

சன்னல் அருகில் அமர்ந்து வீங்கிப் புடைத்த தன் மலர்க் கன்னத்தைக் கலக்கத்துடன் தடவியவாறு தோட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தேவகி, நெருப்பை மிதித்து விட்டவளைப் போல துடித்துத் துள்ளி எழுந்தாள்.

'புகழேந்தி! புத்திசாலிப் பையன் புகழேந்தியா மல்லிகைப் புதர் அருகில் அமர்ந்து சிகரெட்டுப் பிடித்துக் கொண்டிருக்கிறான்? அவன் கையில் பளிச் சென்று வெள்ளையாகத் தெரிகிறதே. அவன் அதை வாயில் வைத்து உறிஞ்சுவதைப் போல, இந்த மங்கலான நேரத்தில்கூட நன்றாகத் தெரிகிறதே!"

அவளுக்கு 'ஓ' வென்று அழ வேண்டும் போல் இருந்தது.

எல்லாவற்றிற்கும் காரணமானவர், அவர்தானே? அவரால்தானே இந்தக் கொடிய நோய் சின்னஞ் சிறுபிஞ்சு உள்ளத்தையும் பற்றிக் கொண்டது?

விருட்டென்று எழுந்து நேராகத் தெருத் திண்ணைக்குச் சென்றாள்.

அங்கு சிகரெட்டு நெருப்பில் வேட்டி கருகுவதையும் உணராமல் தெருவில் பார்வையைப் பதித்து ஏதோ சிந்தனையில் அமர்ந்திருந்த தன் கணவன் கையைப் பற்றி இழுத்துவந்து சன்னல் வழியாகத் தோட்டத்தைச் சுட்டிக் காட்டினாள்.

"சொன்னால் என்மீது கோபித்துக் கொண்டீர்களே! அங்கே பாருங்கள். உங்கள் பிள்ளை செய்யும் அக்கிரமத்தை! இது யாரால் வந்தது...?"

கேசவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் கையிலிருந்த சிகரெட்டு நழுவிக் கீழே விழுந்

தது. அதன் நெருப்பைக்காலால் தேய்த்த அவன், "திருட்டுக் கழுதை! இதற்குள் இவ்வளவு தூரம் முன்னேறி விட்டாயா, நீ!" என்று கத்திக் கொண்டே தோட்டத்திற்கு ஓடினான்.

அவன் கோபத்துடன் வருவதைக் கண்ட புகழேந்தி கையிலிருந்ததைத் தூர வீசி யெறிந்து விட்டு, "என்னப்பா..." என்று எழுந்து நின்றான்.

"என்னவா...இங்கேவா சொல்கிறேன் என்று அவனைத் 'தரதர' வென்று இழுத்துக் கொண்டுவந்து முதுகில் 'பளீர்...பளீர்' என்று நான்கு அறை வைத்தான், கேசவன்.

"ராஸ்கல்! இதற்குள் சிகரெட்டுப் பிடிக்கவா கற்றுக்கொண்டாய், நீ! வாயை ஊதுடா... ஊதுடா பார்ப்போம்!"

"மாட்டேன். நான் வாயை ஊதமாட்டேன். எதுக்காக நான் ஊதிக் காட்டணும்?"

"ஓகோ அப்படியா கதை? உன்னை என்ன செய்கிறேன் பார்..." என்று அருகில் கிடந்த அரிவாள் மணையைத் தூக்கி மகனை அடிக்கவந்த அவனைத் தடுத்து நிறுத்திய தேவகி "அவனை ஏன் அடிக்கிறீர்கள்? குழந்தையை அடிப்பதற்கும் ஒரு முறையில்லையா? அவனைச் சொல்லிக் குற்றமில்லை. முன் ஏர் மாதிரி பின் ஏரும் போகிறது' என்று கூறிவிட்டுப் புகழேந்தியை இழுத்துக் கொண்டு சென்றுவிட்டாள்.

சே...! தேவகி சொன்ன மாதிரி குழந்தை நம்மால் கெட்டே போய் விட்டானே!

தன் தவறினை நன்குணர்ந்தான்: அவன் சட்டைப் பையைக் கை துழாவியது. இரண்டு சிகரெட்டுப் பாக்கெட்டுகள் தோட்டத்தில் போய் விழுந்தன.

* * *

நடுநிசி, மணி பன்னிரண்டு அடித்தது. படுத்துக் கொண்டிருந்த புகழேந்தி மெதுவாக எழுந்தான். 'அப்பா தூங்குகிறாரா' என்று ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டுத் தன் தாயிடம் நெருங்கிச் சென்று "அம்மா...அம்மா" என்று மெல்ல அழைத்தான்.

குழந்தை கெட்டுப்போய் விட்டானே என்று உறக்கம் வராமல் நெஞ்சம் வருந்திக் கொண்டிருந்த அவள், "என்ன, நீ இனிமேல் என்னிடம் பேச வேண்டாம். நீ ரொம்பவும் கெட்டவனா போயிட்டே..." என்றாள்.

"நீ நினைக்கிற மாதிரி நான் சிகரெட்டு பிடிக்கலேம்மா. நான் உன் பிள்ளையில்லையா? தப்பு செய்வேனா?"

"என்ன, புகழேந்தி! உண்மையாகவா?"

நான் எப்போதாவது, மறந்தாவது பொய் பேசியிருக்கிறேனா, அம்மா! சாயங்காலம் நான் கையில் வச்சிருந்தது சிகரெட்டு இல்லை. சிகரெட்டு மிட்டாய்! இருட்டும் நேரமா இருந்ததால் சிகரெட்டு மாதிரியே உங்களுக்குத் தெரிந்திருக்கும். உனக்கும் அப்பாவுக்கும் இருந்த ஆத்திரத்தாலே அதன்

முனையில் நெருப்பு இல்லாததையும் புகைவராததையும் கூட நீங்க இரண்டு பேரும் கவனிக்கவில்லை. கடையிலே இரண்டு வாங்கினேன். இதோ பாரம்மா, இன்னும் ஒண்ணு...''

கால் சட்டைப் பையில் வைத்திருந்த மிட்டாயை எடுத்துக் காட்டினான். ஒரு முனையில் சாம்பல் கங்கு ஒட்டியிருப்பதைப் போன்று தோற்றத்தில் அது அசல் சிகரெட்டு மாதிரியே இருந்தது.

கண்களில் பொங்கி வந்த நீரையும் துடைக்காமல் மகனை ஆரத் தழுவிக்கொண்டாள், தேவகி.

''என்மீது சந்தேகம் வரட்டும்னு நான்தாம்மா அப்பாவின் சிகரெட்டுகளை எடுத்து ஒளிச்சு வைச்சேன். அவர் உன்மீது சந்தேகப் பட்டுவிட்டார். இதோ பாரம்மா...'' என்று எழுந்து சென்று குப்பைக் கூடையிலிருந்து சிகரெட்டுகளைக் கொண்டு வந்து தாயின் எதிரில் கொட்டினான்.

''தப்புன்னு தெரிஞ்சும் நான் வேணுமின்னேதான் அந்த மாதிரி நடிச்சேன். நான் எவ்வளவு அடி பட்டாலும் பரவாயில்லையம்மா! அப்பா அந்தப் பழக்கத்தை விட்டுட்டா போதும். அதனால் தானேம்மா உனக்கும் அப்பாவுக்கும் அடிக்கடி சண்டை வருது?'' என்று கண்கள் கலங்க தாயின் கன்னத்தைத் தடவினான்.

''எனக்காக நீ ஏண்டா கண்ணு அடிபடணும்?''

''அது மாத்திரமில்லேம்மா. அப்பா, பள்ளிக்கூடத்தில் 'புகை பிடிக்கிறது தப்பு: அதனால் இருதயம் கெட்டுப்போயிடும்னு' பிள்ளைகளுக்குச் சொல்லுகிறாரே... அவரே சிகரெட்டுப் பிடிச்சா பையன்கள் என்னம்மா நினைப்பாங்க?''

''அதைப் பற்றி பையன்கள் யாராவது உன்னை ஏதாவது சொன்னார்களா?''

''இதுவரையிலும் கேட்கவில்லை. ஆனால் எப்பவாவது 'ஏண்டா, உங்க அப்பா மட்டும் யோக்கிய மாடா? நமக்குச் சொல்லிவிட்டு அவர் மட்டும் சிகரெட்டுப் பிடிக்கலாமா?' என்று அவரைக் கேலி செய்தால் எனக்கு வருத்தமாக இருக்காதா, அம்மா? பயிருக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டிய வேலியே பயிரை மேய்ந்தால் என்னம்மா செய்வது? மற்றவர்களுக்கு உதாரணமாக புகை பிடிச்சுகிட்டு சீட்டாடுகிறாரென்று நாலுபேர் குறைவா சொன்னால் எனக்கு அவமானமாக இருக்காதாம்மா? நீயே சொல்லும்மா—என்னமோ பேசாம இருக்கிறீயே?'' என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தான், புகழேந்தி.

அவர்கள் உரையாடலை அதுவரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கேசவன் எழுந்து வந்து நுண்ணறிவு மிகுந்த தன் மகன் புகழேந்தியையும், அருமை மனைவி தேவகியையும் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

அவனால் பேச முடியவில்லை!

—''காஞ்சி''

*"நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்" வாழும் வகையறிந்து வாழ்ந்தால், நல்ல சூரிய வெளிச்சத்தில் தோய்ந்து, திறந்த வெளியில் காலேயும் மாலேயும் சிறந்த தேகப்பயிற்சிகளைச் செய்து, சுத்தமான காற்றைச் சுவாசிப்பது இதற்கு வழி, என்று கூறி விளக்குகின்ருர் கட்டுரை ஆசிரியர் டாக்டர் டன்பார் ஸ்மித், எம்.டி.*

**ஆசிரியர்**

# வாழும் வகை

**டாக்டர் டன்பார் டபிள்யூ ஸ்மித், எம். டி.**

*

சூரிய வெளிச்சம் ஒரு வரப் பிரசாதம். இன்று சூரியன் இல்லாமற் போனுல், பூமியில் உயிருள்ள யாவுமே நொடிப் பொழுதில் செத்துப் போய்விடும்! உலகின் உஷ்ண நிலே —273°C ஆகக் குறைந்து விடும்.

நமக்கு சூரிய கதிர்கள் மிகவும் பிரயோஜனமானவை. இவற்றில் வேறு வகையான கதிர்களும் இருக்கின்றன. உதாரணமாக, இன்ஃபிரா ரெட், அல்டிராவயலட் என்ற இரு வகைக் கதிர்களும், இவற்றிற்கு இடையே உள்ளவையும். இன்ஃபிரா ரெட் கதிர்கள் (உஷ்ணக் கதிர்கள்) தசைகளுக்குள் ஊடுருவிச் சென்று, அங்கு வைட்டமின் டி தயாரிக்க உதவியாக இருக்கின்றன. இக் கதிர்கள், இரத்தத்தை உடலின் மேற் பரப்பிற்குக் கொண்டுவந்து, இரத்த ஓட்டத்தைச் சமப்படுத்துகின்றன. அல்டிரா ரெட் கதிர்களின் அலேவு நீளம் மிகவும் குறைவு. இவை மிகவும் முக்கியமானவை; அதிகமாகத் தசைகளேப் பாதிக்கின்றன.

நமக்குச் சூரிய வெளிச்சம் தேவை. எனினும் அதிகமான வெளிச்சம், தீமையை விளேவிக்கும். காச நோய்க் கிருமிகளேயும், மற்றும் தீங்கு விளேவிக்கும் கிருமிகளேயும் கொல்லுவது அல்டிரா வயலட் வெளிச்சம் தான். சருமத்துக்கு கீழே இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்துகிறதும் இவை தாம்.

நமது உடலில் அறுநூற்றுக்கு அதிகமான தசைகள் உண்டு. ஒவ்வொரு நாளும், அவற்றிற்குச் சரியான பயிற்சி அளிக்க வேண்டும். உடலில் 40 சதவீதத்திற்கு அதிகமான பாகம், தசைகளால் ஆனது. ஒரு சிறிய தசையில், கோடிக் கணக்கான கணங்கள் இருக்கின்றன. தசைக் கணங்கள் ஒவ்வொன்றுடனும், ஒரு இரத்தக் குழாயும், நரம்புத் தொடர்ச்சியும், சுமார் நாலு சிறு தந்துகிகளும்

இணைக்கப்பட்டிருக்கின்றன. பயிற்சி அளிக்கப்படாத தசைகள் சுருங்கி விடும். இதைப் பிரத்தியட்சமாகக் காண ஒரு வழி உண்டு.

ஒரு கையையோ, காலையோ, அப்படியே, ஆடாமல் அசையாமல் இருக்கும்படியாக, உறையில் போட்டு வைத்திருந்தால், பின்பு பார்க்கும் போது, அந்த அவயவம் மெலிந்து போய், சிறியதாகத் தோற்றமளிக்கும்.

## தேகாப்பியாசத்தினால் ஏற்படுகின்ற ஒன்பது நன்மைகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1. தசையின் வலுவை அதிகரிப்பது. தசைகள் வலுவாக இருந்தால் தான், நேராக நிமிர்ந்து இருக்கலாம். சிலர் கூனிக் கொண்டிருப்பதற்குக் காரணம், தசைகள் எலும்புக் கூட்டை, வலுவாக இழுத்துப் பிடிக்காததுதான்.

2. இரத்த ஓட்டம் துரிதப்படுகின்றது. கால்களிலிருக்கும் சிரைகளின் மூலமாகப் பாதத்திலுள்ள இரத்தம் இருதயத்தை அடைகின்றது. தசை சுருங்கும் போதெல்லாம், சிரையின் வழியாக இரத்தம் இருதயத்தை நோக்கித் தள்ளப்படுகின்றது. சிலருக்கு, அவயவங்களின் நுனியில் இரத்த ஓட்டம் மந்தமாக இருப்பதற்கு அப்பியாசமின்மை தான் காரணம். தடித்த சிரைகளைக் காலில் கொண்டவர்கள் இறுக்கும் காலுறைகளை அணிய வேண்டும். அவ்வாறு செய்து கொண்டு, தேகப் பயிற்சி செய்க.

3. ஆழ்ந்த மூச்சு எடுக்கத் தூண்டுகிறது.

வேகமாக நடந்தால், ஆழ்ந்த மூச்சு தானாகவே வருகிறது. தற்கால நவநாகரீக வாழ்க்கையில், மனிதர் வேகமாக நடப்பதில்லை. எனவே தான், உடல் சோர்ந்து போகிறது.

4. அவசியமின்றி உடல் பருக்காமல் பார்த்துக் கொள்ளுகின்றது.

பசியைக் கட்டுப்படுத்த பயிற்சி தேவை. இலேசான பயிற்சி செய்து வந்தால், அது பசியைக் குறைக்கும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

5. கழிவுப் பொருள்கள் வெளியேற உதவுகின்றது.

6. உறுப்புக்களின் வேலையைச் சீர்படுத்துகின்றது. இருதயத்திலுள்ள இரத்தக் குழாய்களுக்குக் காப்பளிக்கின்றது. இருதயக் கோளாறினால் பீடிக்கப்பட்டவர்கள், சுகம் அடைந்த பின்னர் ஒழுங்காகத் தேகாப்பியாசங்களைச் செய்தால், அவ்வாறு செய்யாதவர்களைக் காட்டிலும், அதிக நாட்களுக்கு உயிருடன் இருப்பார்கள். மேலும் அப்பியாசம், கல்லீரலுக்கும் பிற உறுப்புகளுக்கும் நன்மை பயக்கின்றது.

7. சீரணத்தைச் சீர்படுத்து

கின்றது. ஒழுங்காகத் தேகப் பயிற்சி செய்து வந்தால், சீரண மாகாமல் இருப்பதற்குரிய காரணங்கள், பலவும் மாயமாக மறைந்து போகும்.

8. ஆழ்ந்த நல்லநித்திரையைப் பெற இது உதவுகின்றது.

9. மூளை சுறு சுறுப்பாக இருக்க உதவுகின்றது. ஆழ்ந்து சிந்திப்பதென்ருல், சிலருக்கு நடக்கத் தேவையாகின்றது. எழுந்து நடக்கும் போது, மூளை சுறு சுறுப்பாக வேலை செய்கின்றது.

## தக்க உணவு

ஆரோக்கியத்தின் ஆதாரமே உணவுதான். எதை உண்கிருேமோ, அதற்கேற்ருற் போலவே தான் நமது உடலும் இருக்கின்றது. *சீரான உணவு திட்டத்திற்* கான பத்து முக்கிய கருத்துக்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

1 சிறந்த இயற்கை உணவுகளைத் தெரிந்து கொள்.

2. ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதைத் தவிரு.

3. உணவுசாதாரணமாகஇருந் *தால் போதும். பல தரப்பட்ட* வற்றை ஒன்று கலந்து, விசித்திர மாக்கப்பட்ட உணவு தேவை இல்லை.

4. பலவகை உணவுப் பண்டங்களை யூகமாகச் சேர்ப்பது நலம். காய்கறிகளையும், மெல்லிய பழங்களையும் ஒன்று சேர்க்காதே.

5. சீராய்ச் சமை.

6. அளவாய்ச் சாப்பிடு.

7. மென்று உண்.

8. காலம் தவருமல் உண்.

9. காலை உணவு போதுமான அளவில் இருக்கட்டும். நண் பகல் உணவு தாராளமாக உண். இரவு வேளைகளில் சிறிய அளவே உண்பாயாக.

10. சாப்பிடும் போது சந் தோஷமாகச் சாப்பிடு. மன மலர்ச்சி வைட்டமின் போன்றது. விசனத்துடன் உண்டால், அஜீர ணத்தை வருந்தி அழைப்பது போலாகும். சோர்வுள்ள மனம், இரைப்பையை மந்தப்படுத்தும். மனைவிமாரே, உங்கள் கணவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களைக் கோபப் படுத் *தாதீர். சண்டை போட* வேண்டு மானல், இடை நேரத்திற்கென்று அதை வைத்துக்கொள்ளுங்கள்.

## *சுவாசித்தல்*

நுரையீரல்களின் மூலமாக, விஷப் பொருள்களில் சிலவற்றை நாம் வெளியே அகற்றி விடுகிருேம். உதாரணமாக ஒன்று கரியமில வாயு. இது அப்படியே உடலில் தங்கி விடுமாகில், மரணம்தான் நேரிடும். அதே வேளையில் உயிருக்கு ஆதரவாக இருக்கும் பிராண வாயுவை, உள்ளே இழுத்துக் கொள்ளுகின்றோம்.

அனு தினமும், பல முறை ஆழ்ந்த மூச்சு எடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அநேக ருக்குச் சீராக எப்படி சுவாசிப்ப

தென்றே தெரிவதில்லை. ஆழ்ந்த மூச்சு வாங்க, ஏதுவான அப்பியாசங்களையும் செய்வதில்லை: வயிறே, மார்பைக் காட்டிலும், மூச்சு விடுவதில் அதிகப் பங்கு கொள்ளுகிறது என்று அநேகருக்குத் தெரியாது.

மார்புக்கும், வயிற்றுக்கும் இடையில் விதானம் என்ற தசை இருக்கிறது. மூச்சு விடும் போது இது மேலும் கீழுமாக அசைகின்றது. அதே சமயத்தில், வயிற்றுச் சுவர், உள்ளும் வெளியுமாக அசைந்து, விதானத்தை மேலும், கீழுமாக மாற்றி மாற்றித் தள்ளுகின்றது. அனுதினமும் ஆழமான மூச்சு எடுக்க வேண்டும். அநேக முறைகள் இப்படிச் செய்ய வேண்டும்—அதிகாலையில் எழுந்தவுடனே, காலை நேரத்தில் ஒரு முறை, மத்தியானத்தில் நடுப் பகலில், இரவில் வீடு திரும்பும் வழியில், படுக்கைக்குப்போவதற்கு முன்பாக, இவ்வாறு பல தடவைகளில், மறுபடியும் மறுபடியும் இதைச் செய்ய வேண்டும்.

சுத்தமான காற்றை உட்சுவாசிப்பது, புகைந்து கொண்டிருக்கிற அடுப்புக்குள், புது காற்றைப் புகுத்தி, நெருப்பைக் கொழுந்து விட்டு எரியச் செய்வதைப் போலாகும். நாசியின் வழியாகத் தான் சுவாசிக்க வேண்டும். வாயின் வழியாகச் சுவாசிக்கக் கூடாது.

சுவாசித்தலால், இருதயத்தின் வேலையையும் சுறு சுறுப்பாக்கி விடுகின்றோம். ஆழமான மூச்சு எடுக்கும் போது, புப்புசங்கள் விரிவடைகின்றன. இதன் விளைவால், இரத்தக் குழாய்கள் அழுத்தப் பட்டு, உள்ளே இருக்கும் இரத்தம் வெளியே தள்ளப்படுகின்றது. மூச்சை வெளியே விடும் போது, அரை குறையான காலி இடம் ஏற்படுகின்றது. இது சிறையிலுள்ள இரத்தத்தை உறிஞ்சி, மார்புக்கும் இருதயத்திற்கும் அனுப்புகின்றது. எனவே சுவாசித்தல், இரத்தத்தை அழுத்திச் செலுத்தும் ஒரு உதவி குழாய் பம்ப் போலவே வேலை செய்கிறது என்று கூறலாம். மறை முகமாக, குடலில் ஏற்படும் அசைவுகளுக்கும், அலுவல்களுக்கும், சுவாசித்தல் மிகவும் உதவியாக இருக்கின்றது. ஆழ்ந்து சுவாசித்துப் பழக்கம் இல்லாதவர்களுக்கு, நிரந்தரமான மலச் சிக்கல் ஏற்படலாம்.

திறந்த வெளியில் அதிகமான நேரத்தைச் செலவிட வேண்டும். வெளியில் போய் உலாவுவது நலம். இரவில் ஜன்னல்களைத் திறந்து வைத்து, தூங்க வேண்டும். பகல் நேரத்தில் கூட, படுக்கை அறையில் காற்றோட்டம் இருக்க வேண்டும். —புகை நுழைந்து விடுமோ என்று பயப்பட வேண்டாம். சிறிது தூசி இருந்தால் என்ன? சுத்தமான காற்றுத்தான் மிக மிகத் தேவையானது. தூசிகளை "வாக்குவம்" பம்ப் கொண்டு, நீக்கி விடவும் முடியும்.

—நல்வழி

# கற்றதனால் ஆன பயன்

— மா. கி. தசரதன், எம். ஏ. —

கல்வியின் பெருமையையும், தேவையையும் பல காலமாகப் பலர் பல முறையில் எடுத்துச் சொல்லியுள்ளனர். அழியாத செல்வம், நின்று நிலைக்கும் தன்மையுடையது, என்றும் பயன்படக் கூடியது என்றெல்லாம் அதன் பெருமையைக் கேட்கிறோம். கல்வியே மனிதனுக்குக் கண் என்று வள்ளுவர் கூறிவிட்டார். வற்றாத பெரும் பொருளாக இருந்து காலமெல்லாம் தன்னைப்பற்றி எண்ணிப் பேசிக் கொண்டிருக்க இடம் தருகின்றது அது.

ஆனால் அந்தக் கல்வி என்பது தான் என்ன? நான்கும் நான்கும் சேர்ந்து எட்டாகின்றது என்று சொல்லிடும் திறமையோ, காரிகை அறிந்து கவிபாடும் வல்லமையோ, பாடிய கவியின் பொருள் விளக்கும் புலமையோ-இவைமட்டுமே கல்வி ஆகிவிடுமா?

இவை மட்டுமே கல்வி ஆகாது என்றால் வேறு எதுவோ சேர்ந்து தான் கல்வி முழுமை பெறுகின்றது. அப்படி அரும்பாடுபட்டுப் பெறுகின்ற கல்விச் செல்வத்தினால் மனிதன் எவ்வளவோ பயன் பெறுகின்றான். சாதாரண மனிதனைப் போலவே, உண்டு, உடுத்தி, உடலமைப்பைப் பெற்றிருப்பினும் கற்றவனுக்குத் தனி மதிப்பு, புகழ் இருக்கிறது. அவன் வாழ்க்கையைப் பிறர் கூர்ந்து காணுகின்றனர். பலருடைய போற்றுதலுக்குக் காரணமாக இருக்கும் அந்தக் கல்வியைப் பயன் படுத்தி மனிதன் செய்ய வேண்டிய பணிகள் எத்துணையோ உள்ளன. அப்படி உள்ள பணிகள் என்றும் எங்கும் ஒரே தன்மையோடு இருப்பதில்லை. உலகத்தில் நேற்று இருந்தவை எத்துணையோ இன்று இல்லை. இன்று இருப்பவை நாளையும் இருக்கும் என்ற நிலை இல்லை. உலகம் மாறிக் கொண்டே இருப்பதனால், புதுமை கணந்தோறும் தோன்றுவதனால், எண்ணங்களும் புதிது புதிதாக விரிந்து கொண்டே போகின்றன. கல்வியினால் பெறவேண்டிய பயன், செய்ய வேண்டியபணி இவைகளும் மாறுகின்றன. திருவள்ளுவர் காலத்தில் கற்றதனால் ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவது என்று மட்டுமே மக்கள் எண்ணியிருக்கக் கூடும். திருவள்ளுவர் காலம் இன்று இல்லை. உலகம் எவ்வளவோ முறையில் மாற்றம் கண்டு விட்டது. நாமும் அந்த மாற்றங்களுக்கு எல்லாம் நம்மை உட்படுத்திக் கொண்டு வாழுகின்றோம். எனவே வாலறிவன் நற்றாள் தொழுவது மட்டுமே கற்றதனால் ஆயபயன் என்று கருதிக்கொண்டிருக்கக் கூடாது.

"உலகம் எவ்வழியில் நடக்கின்றதோ அந்தவழியில் உலகத்தோடு ஒட்டி நடத்தலே அறிவாகும்." இதனை நமக்குக் காலத்தோடு ஒட்டி வாழ்க என்று அன்றே வள்ளுவர் கூறிச்சென்றுள்ளார். ஆகவே நாம் கல்வியைக் கொண்டு வாழ்க்கையில் எப்படியெல்லாம் பயன் பெறலாம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேற்கு நாட்டு மக்களும் நம்மைப்போலவே எல்லாத் துறைகளிலும் தொடக்க நாட்களில் பழமையின் பிடியில் சிக்குண்டு கிடந்தனர். எந்தத் துறையிலும் அறியாமையும் மூட நம்பிக்கையும் அவர்களை அடிமை கொண்டிருந்த பழங்காலம் இன்று அங்கே இல்லை. புதுமை மலர்ந்துள்ளது; பொலிவு பிறந்துள்ளது. சமயத்தைப் பற்றியதாகவும் சமயத்தைச் சிறப்பிப்பதாகவுமே முதன்முதலில் மேற்கு நாடுகளில் கல்வியின் பணி கருதப் பட்டுவந்தது. மெல்ல மெல்ல அங்கே கருத்துக்களில் புரட்சி தோன்றிச் செயல்படத் தொடங்கியவுடன் மேற்கு நாட்டு மனிதர் பழமையின் ஒவ்வொரு பிடியிலிருந்தும் தங்களைவிடு விடுத்துக் கொண்டு புதியபுதிய துறைகளில் வாழ்க்கையினைத் தொடங்கினர்; வெற்றி கண்டனர்; கல்வித் துறையில் அவர்கள் அடைந்தமுன்னேற்றம் முக்கியமானதாகும். சமயத்தைப் புகட்டத்தான் கல்விபயன் படவேண்டும் என்ற கருத்து சமுதாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்குப் பயன்படுதல் வேண்டும் என்றாயிற்று. பின்னர் நாட்டிற்காகத் தன்னையும், தியாகத்தை ஊட்டும் நாட்டுப் பற்றையும் கொள்ளும் குடிமகனாக ஒவ்வொருவனும் ஆதல் வேண்டும் என்பதும் அங்கே கல்வியின் நோக்கமாகக் கருதப்பட்டது. இன்று மேற்கு நாட்டில் விஞ்ஞானத் துறையில் வெற்றிகாண வேண்டும் என்பதே குறிக்கோள் எனலாம். பேக்கன் என்ற அறிஞர் அங்கே நெடுங் காலத்திற்கு முன்னமேயே, "அறிவு என்பது இயற்கையை வெல்லும் ஆற்றலே" என்று மக்கள் மனதில் அறிவின் வேட்கையைப் பிறப்பித்துள்ளார் ஆகவே அந்த மக்கள் அறிவியல் துறையில் தங்கள் ஆவலைக் காட்டுகின்றனர்.

நம் முன்னோர் முறையாயிற்றே, இதனை நாம் தள்ளுதல் தவறாகாதோ என்று அவர்கள் தயங்கியது இல்லை. ஆயிரக்கணக்காக இருந்த கடவுளர்களை எல்லாம் பிள்ளைப் பருவத்துப் பேதை விளையாட்டு என்று ஒதுக்கித்தள்ளினர். காலமெல்லாம் கிடந்த எத்துணையோ பழக்கங்களையும் முறைகளையும் கூடாது, இயலாது என்பதால் எடுத்தெறிந்து விட்டு இயன்ற நெறியும் ஏற்புடைய வழியும் எது எனக் கண்டு வாழும் வகை தேடினர். ஆனால் நமது நாட்டிலேதான் முன்னோர் முறை. நமது காலத்திலா அதனை நீக்குவது தள்ளுவது என்ற தயக்கம், அச்சம், நடுக்கம் இவை பிறக்கின்றன. சமுதாயத்தின் சூழ்நிலை, மாறுகின்ற உலகத்தின் வேகத்தில் வேறுபட்டுக் கொண்டே இருக்

கிறது. அதற்கு ஏற்ப நாமும் நம்மையும் நம் இயல்புகளையும் மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். அது தான் வளர்ச்சி எனப்படும். ஒரே நிலையில் இருப்பதனை வளர்ச்சி என்று எவ்வாறு கூறல் ஒல்லும்?

ஆனால் கற்றதனால் ஆயபயன் வாலறிவன் நற்றாள் தொழ வேண்டாமா? என்று கேட்டால், தொழலாம், நன்றாகத் தொழலாம்.

வாலறிவனைத் தொழுவதா வேண்டாமா என்பது அல்ல இப்போது சிந்திக்க வேண்டுவது. கல்வியினால் உண்மையாக ஒருவன் அடைய வேண்டிய பயன் என்ன என்ற முக்கியப் பிரச்சினை தான் நாம் கவனிக்க வேண்டுவது. *பத்தாவது படித்தான், பி.ஏ. முடித்தான்* என்று சொல்லி விட்டால் மட்டும் போதுமா? கற்ற கல்வியினால் இந்த அலுவலகத்தில் வேலை கிடைத்தது, வழக்கு மன்றத்தில் வாழ்க்கை நடக்கிறது, பை நிறைகின்றது என்று கூறிவிட்டால் போதுமா? உண்மையான கல்வியின் பயன் இதில் இல்லை.

இதிலே மட்டும் இல்லை என்பதனால் இதுவும் கல்வியின் பயன் தான் என்பதை அறிகின்றோம். ஆம் கற்றதனால் தன்வாழ்க்கையில் வளம காணுதல் வேண்டும். வயிற்றுக் கவலையை மறக்க கின்ற அளவுக்காவது கல்வி ஒரு வழியில் கை கொடுக்க வேண்டும். கல்வியே செல்வம். அதுவும் அழியாத அருஞ் செல்வம் என்று இருந்தால் வயிற்றுக் கவலை தீராது. நல்ல கல்வியிருந்தும், கவிதையில் வல்லவர்களாக மிளிர்ந்தும், பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தங்களுக்கும் தங்களை நம்பியவர்களுக்கும் ஏதுமற்ற ஏழையாய்ஏங்கி வள்ளல்களின் வண்மையை நம்பி வாழ்ந்த வாழ்க்கையை நாம் இலக்கியங்களில் காணுகின்றோம். அந்த நிலை வருந்தக் கூடியது. கற்றவன் தன் கல்வியினால் கவலையற்ற வாழ்க்கை நடாத்தும் நிலையும் வாய்ப்பும் பெறுதல் வேண்டும். அத்தகைய வளமிக்க வாழ்க்கை கிடைத்து குடும்பத்தில் உள்ள போது கற்றவன் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும். தான் கற்றவன் மற்றவரின் மேம்பட்டவன் என்ற எண்ணம் இருத்தல் கூடாது. அதுவும் அன்பு குழைந்து அகம் கலந்து மகிழ்ச்சி பொங்கி இருக்கவேண்டிய இல்லத்தில் நிச்சயம் அந்தத் 'தனித் தன்மை' இருத்தல் கூடாது. எல்லோரிடமும் அன்பைக் கொட்டி வாழும் நல்ல வாழ்க்கை இல்லத்தில் இருக்கவேண்டும்.

**கல்வியினுடைய பெரும்பயன் எண்ணத்தில் ஏற்படும் மாறுதலில்தான் அடங்கியுள்ளது.** கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் புறத்தில் மாறுபாடு ஒன்றும் இல்லை. ஆனால் அகத்தில் மாறுதல் உண்டு. அந்த மாறுபாடு 'நாம் உயர்ந்தோம்' என்ற தருக்கைத் தருகின்ற அகம்பாவ மாறுபாடாக நிச்சயம்இருத்தல் கூடாது. அகந்தையைத் தராமல் அழகு ஏற்படுத்தக்கூடிய மாறுபாடு, எண்ணத்தில் எழுச்சி பெறுவதுதான்.

கற்றவனுக்கு அழகே எண்ணத் தெரிவதுதான். "நான் இதை அறிவேன்; இந்த நூல் எனக்கு மனப்பாடம்; அந்த நூலுக்குப் பதவுரை தேவையா, பொழிப்புரை போதுமா?" என்று கேட்டு விட்டு எண்ணத்தில் புதுமை கொள்ளாமலிருந்தால் அந்தக் கல்வியினால் பயன் ஒன்றும் இல்லை. அருஞ் செய்யுட்களை ஏந்தியுள்ள நூல்கள் எப்படித்தமக்குப் பயனின்றி இருக்கின்றனவோ அதைப் போலவே எண்ணுதற்கு இயலாதவன் கற்றவையும் ஒரு பயனுமின்றிப் போகும்.

எண்ணம் எதனையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது. 'எண்ணியார் திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்' என்று வள்ளுவர் எண்ணத்தின் வலிவைக் குறிப்பிட்டுள்ளார். சமுதாயத்தை மாற்றவும் திருத்தவும் வல்ல எண்ணத்தைப் பெறுவது அவ்வளவு பெரிய பணியாகும். அடிப்படையில் நலன் தருகின்றதாகிய எண்ணும் ஆற்றலை ஒருவன் பெற்றுவிட்டால், அவன் தான் எண்ணுவதோடு மட்டும் மன அமைதி அடையமாட்டான். இதுவரை உலகில் தோன்றிய உத்தமர்களின் எண்ணங்களில் எல்லாம் தன் மனதை ஈடுபடுத்தி அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பயன் பெறுவான். பிறரையும் பயன் பெறச் செய்வான்.

இந்தப் பொலிவும் விளக்கமும் வாழ்க்கையில் இருத்தற்கு மனிதன் என்றும் மனச்சோர்வு கொள்ளுதல் கூடாது. கிளர்ந்தெழும் புத்துணர்ச்சி பெற்ற மனத்தினனாக இருந்தால்தான் துன்பம் நேர்கையில் துவண்டு மாண்டிடாமல், இன்பம் காணுதற்கு என்னவழி என்று ஆராய்தல் இயலும். வாழ வழி கிடைக்கும் என்று நம்பிக்கை கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். நம்பிக்கை இல்லையேல் இன்று இந்த அளவுக்கு உலகம் முன்னேறி இருக்க இயலாது.

நாடு வரும் வரும் என்ற நம்பிக்கைதான் அமெரிக்காவைக் காட்டிற்று. ஆராய்ச்சி வெற்றி பெறும் பெறும் என்ற நம்பிக்கைதான் பல அரிய விஞ்ஞானப் புதுமைகளை உலகறியச் செய்தது. ஏழை ஒரு கவளம் சோறு கிடைக்கும் என்று நம்புவதனால்தான் உலகத்தில் இன்னும் அமைதி நிலவுகின்றது. வாழ்வு மலரும் என்ற நல்ல நம்பிக்கைதான் தொழிலாளரை இன்னும் உழைக்கச் செய்கிறது. மழைபொழியும்—மண்விளையும் என்று நம்பித்தான், உழவன் ஏரைத் தொட்டு எருதை நாடுகின்றான். வாழ்க்கையின் வற்றாத ஊற்றாக இருக்கும் இந்த அரிய பொருளாம் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால் அதற்கு மனம் என்றும் சோர்வு கொள்ளாதிருத்தல் வேண்டும். புதிய ஊக்கம் பிறத்தல் வேண்டும். எதிலும் ஈடுபாடு இருத்தல் வேண்டும். அந்த நல்ல உற்சாகத்தைத் தரக்கூடிய கல்வி பயின்றால் தான் கற்றவனால் நாட்டுக்கு நன்மை. தான் நாட்டின் குடிமகன் என்ற உரிமையை உணர்வது மட்டும்

இன்றி, ஒரு குடிமகன் நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என்பதனையும் கல்வி ஒருவருக்கு உணர்த்தவேண்டும். நாம் கற்றோம், நமது சுற்றம் சிறந்தால் சாலும் என்ற எண்ணம் இருத்தல் கூடாது. நம் போன்ற பிறர், சமுதாயம், நாடு இவை நலம்பெற, பலன் துய்க்க நாம் என்ன செய்யலாம்? நமது ஆற்றல், திறம், வாய்ப்பு இவற்றைஎவ்வாறு பயன்படுத்துதல் வேண்டும்? சமுதாயம் முன்னேறவேண்டுமாயின் அதற்கு எது செய்தல் வேண்டும்? என்று பரந்த முறையில் எண்ணங்களை வளர்க்க வேண்டும். தொண்டு மனப்பான்மையும் தொண்டடாகும் வாய்ப்பையும் கல்வி தருமேல் அது நல்ல பயன் தந்த கல்வி எனலாம்.

அந்தப் பலனை அது தருதல் வேண்டுமாயின் கற்பவனின் மனதிலே பெரிய மாற்றத்தை விளைவிக்க வேண்டும். தான் என்ற சிறியதோர் புள்ளியைமட்டுமே சுற்றிச் சுழலும் இயல்புடைய மனம், உலகம் என்ற பேரெல்லையைப் பற்றிப் பற்றிப் பரந்துதிரியும் பக்குவம் பெறுதல் வேண்டும். மனதில் இந்த அளவுக்கு மாற்றம் விளைவிக்கவில்லையேல் அந்தக் கல்வி பயன் அற்றதுதான். அதுவெறும் காலக்கழிவுக்காகச் செய்யப்பெற்ற ஏற்பாடாக இருக்குமேயன்றிக்கருத்தைத்திருத்தவோ, நலன்தரவோ ஏற்படுத்தப்பட்ட நல்லதோர் அமைப்பு முறையாகாது.

இந்த எண்ணப் புரட்சியைத் தரவல்ல கல்வி வாய்த்ததும் இன்னும் ஒன்று வாய்க்கவேண்டும் என்று சிலர் கூறுவர். எண்ணத்தின் எழுச்சியை, சிந்தனையின் ஆற்றலை ஏற்றுச் செயலாற்ற வல்ல உடல் நலம் இருத்தல் வேண்டும். நல்ல உடல் நலம் இருந்தால் தான் எதுவும் நடக்குமென்று கூறுவர். இதுவும் உண்மையே. கல்வியினால் ஆகும் பயன்களில் உடல் ஓம்பும் முயற்சியும் ஒன்று தான். அறிவியல் துறையில் மனிதன் எவ்வளவோ முன்னேற்றம் கண்டுள்ள-எதைச்செய்யவும் ஏற்ற கருவிகள் உள்ள-இந்த நாட்களிலுமா உடல்நலம் இன்றியமையாதது என்று யாவரும் எண்ணுர். ஏனெனில் மனமும் உடலும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டியங்கிடுவன என்பதனை இன்று எல்லோரும் அறிவர். நல்ல மனமே உடலை வளர்க்கும் என்பதும், நல்ல உடலிலேயே நல்ல மனம் வாழும் என்பதும் நம்நாட்டு மக்கள் நெடுநாட்களாகச் சொல்லிடும் உண்மைகளாகும். ஆகவே உடல்தானே. எற்புச்சட்டகம், மாயை, என்று எவரும் எண்ணுர். இதனைப் பேணி வளர்த்தல் பெருங்கடமை என்பது உணர்வார், கல்வியின் பயனாக அதுவும் இருத்தல் வேண்டும் எனக் கூறுவர்.

இப்படிச் சங்கிலித் தொடர் போன்று ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் அடிப்படையாகவும் அமைந்திருக்கும் இந்தப் பலன்கள் மனிதனுக்கு வேண்டப்படும் இன்றியமையாததன்மைகளாகும். இந்தத் தன்மைகளைத் தர இயலா

விடில் அது கல்வியும் ஆகாது. பயனில்லாத ஒன்றினைச் செய்வதும் ஒன்றுதான் செய்யாமையும் ஒன்றுதான்.

சங்ககாலத்தில் அமைந்த கல்விமுறை தனக்கென வாழாந்து பிறர்க்குரியாளன் ஆவதையேவலியுறுத்தி வந்தது. அன்றைய மக்கள் வாழ்க்கையும் தமக்காக இருந்ததைவிடப் பிறர்க்காகவே பெரிதும் பயன்பட்டும் வந்தது. ஆனால் இடைக் காலத்தில் இந்த மண்ணில் விதி என்றதோர் பொல்லாங்கு சூழ்ந்தபின்னர் மனம் மாசுற்றது. 'அவனவன் விதி அது' என்ற தொடர், மனதில் இருந்து ஈரத்தைத் துடைத்து விட்டது. துன்பத்தைக்கண்டு உருகும் நிலைமாறி அதனைக் கண்டபின் உருகாத கன் மனம் வந்தது.

விதிக்கொள்கையோடு இறக்குமதியான சாத்திரங்களும் புராணங்களும் அவனவன் தன் கருமமே கண்ணாக இருப்பதையே வற்புறுத்தின. பிறனுக்கு உதவி செய்ய எண்ணுவது பயனற்ற செயல் எனக்கூறப்பட்டது. கற்றவர் இந்தப் புராணங்களும் சாத்திரங்களும் கூறுவதுபோல் நடப்பவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்வது தேவைப்பட்டது. ஆகவே, கற்றவர்கள் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படுவதை மறந்தனர்; தங்களைப்பற்றியே எண்ணினர். ஆனால் கல்லாதவர்களோ இந்தப் போலித் தத்துவத்தை உணராததனால் உணர்ந்தும் மதிக்காததனால் பழையபடி பிறர்க்காகவே வாழ்ந்து வரலாயினர்.

இதனைக் கண்டவர்கள், கற்றவர்களினும் கல்லாதவர்களே உலகிற்குப் பயன்படுவதனை உணர்ந்தனர். அந்த உணர்ச்சிதான் இடைக்காலத்தில் கற்றவர்களின்மீது வெறுப்பாக மாறியது.

'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்றும், 'கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனியமையும்,'' என்றெல்லாம் இடைக்காலத்தில் கற்றவர்களையே கூறவைத்தது, பயற்ற கல்விதான். எனவே உண்மையிலேயே கல்வி பயன் தரவேண்டுமானால் அந்தக் கல்வியினால் கற்றவர் மட்டும் பயன் பெறுவதோடு அமையாமல் பிறர்க்கு அதனால் நன்மை ஏற்படுதல் வேண்டும்.

இதனைத்தான் வள்ளுவர் பலவகைகளில் வற்புறுத்திக் கூறியுள்ளார். மனிதன் மனிதத்தன்மை பெற்று வாழ்வதற்குக் கல்வி பயன்படவேண்டும் அதுதான் கற்றதனால் ஆயபயன் ஆகும்.

—"சிரணி"

# THE TAMIL NADU AIDED SECONDARY SCHOOL MANAGEMENTS' ASSOCIATION (Regd.)

98, Amman Kovil Street, Madras-1.

14, October 1969.

---

## QUESTIONNAIRE

I. (i) MANAGING BODIES FOR SCHOOLS:

1. What in your view should be the composition of a managing body for a school?

Most aided institutions are denominational, started by various communities such as Christian institutions both Catholic and Protestant, Muslim institutions started under Wakt and private trust, Hindu institutions in general name like Hindu High School or Community institutions like Tondaimandalam Tuluva Velalars' High School, Nadar High School, Jain High School or with the Founder's name like Sri M. Ct. Muthiah Chettair High School Rao Bahadur Calavala Cunnan Chetty's High School, Singaram Pillai High Schools etc.

The present committees act as successors in Trust of the Founders' Rules and Regulations. The question of Fundamental Rights and Privileges and the original object of the Trust or Society have to be gone into before trying to upset the existing arrangements.

The managing committees are constituted under and are governed by the Memorandum and Articles of Association and the Bye-laws framed thereunder, registered either under the Indian Companies Act or the Society's Registration Act or functioning under Trustee deeds or under schemes framed by courts. Missionary institutions are governed by the Rules of the Religious Organisation that founded the institution.

Status quo and non-interference in regard to schools already in existence are recommended. The Department and Government have no justification to regard private managements as subordinate to them; they are essentially by constitution autonomous bodies and have to be treated as such.

2. What functions could such a managing body be assigned and what responsibilities could it be charged with ?

They are all prescribed in the Memorandum and Articles of Association and the Bye-Laws framed there-under.

3. It has been suggested that proper qualifications should be laid down for membership in the managing body. What is your view should be the qualifications ?

It is not necessary to lay any qualification for membership when the Memorandum or Bye-Laws prescribe the constitution of the Committees. Generally, the Committees coopt or elect responsible persons of the area and its neighbourhood.

4. What financial guarantees should a managing body be able to offer in order to ensure that it is sound and stable and will discharge its responsibilities to the full satisfaction of all concerned ?

No guarantee seems necessary as staff grant is paid by Government every month.

(ii) CORRESPONDENTS :

5. How should a Correspondent be appointed any by whom ?

As now by the Committee, in accordance with the Memorandum and Articles of Association and Rules of the Society registered under the Indian Companies Act or Societies' Act or the Trust Act etc.

6. What qualifications would you like to be prescribed for a person for appointment as a Correspondent and what should be the tenure of this office ? Give reasons.

Tenure is provided in the Rules of the Society. Honest and dedicated service need not be penalised by fixing a tenure. No time limit is necessary, as in some cases, the Founder himself or his nominees may wish to continue as Correspondents during his life time.

7. Define the powers you would like to be assigned to a Correspondent consistent with his responsibilities to the teachers, the management the Government and the public.

The powers of the Secretary and correspondent are defined in the Memorandum and Articles of Association and the Bye-laws of the Managing Organisation. To appoint staff and have full disciplinary control over the staff and administer the funds of the School under the direction of the Committee. There is in addition the Educational Rules of the Government

which provide for these. The Correspondent usually acts in consultation with the Committee or in anticipation of ratification in urgent cases.

(iii) GOVERNMENT AND THE MANAGING BODY :

8. At the time of according *permission to open new schools* Government ensure that the management should vest in registered committees. In addition to the above should Government recognise the *managing bodies of schools ? If so under what terms and conditions ?*

Not necessary. The registration will do and they are bound by the terms of the Act under which they are registered. The Department may ensure that the Memorandum and Articles of Association are observed strictly.

9. Similarly correspondents are now approved by the Department. Please state how in your view such approval or recognition should be accorded and on what conditions ?

Approval is not necessary. The Department will be intimated of changes. The correspondent represents an autonomous statutory organisation.

10. Under what circumstances should the Government assume powers to dissolve managing bodies or romove members and please define the scope of such powers.

Since the management is governed by the rules and regulations that have been framed under the several acts, the Government cannot interfere.

11. It has been stated that under certain *circumstance it is* absolutely necessary that Government should assume powers to disqualify a correspondent and appoint a new person in his place. If you agree with this view circumstances when such powers should be assumed and the procedure for their enforcement.

This question does not arise. Attention is invited to Rule 99 A, M. E. R.

12. There are occasions when the normal working of the school is hampered due to non-observance of Government Rules and directives by *the managing body or* the correspondent or both. It is suggested that the effective way of tackling such a situation, in the interest of all concerned is to enforce sanctions without in any way affecting the day to day working *of the school. If* you agree with this view what effective sanctions can the Government enforce against the management or the Correspondent ?

The Association does not understand the full implication of the term "Sanctions".

13. Should Government resort to direct payment to teachers? What are the advantages and disadvantages of the system?

No.

It is however suggested, that as there is delay in the payments in the case of new entrants in the staff or where exemption is asked for or where the fixation of pay vests with the District Educational Officer, an adhoc grant may be paid. Excess payment may be required to be remitted or adjusted in the next adhoc grant. The approval of the District Educational Officer for filling in the sanctioned posts should not be insisted; also the Department should not insist on waiting till the Employment Exchange takes its own time and submits a list of probable candidates. Once the advertisement is made with a specific provision that a copy should be sent to the District Educational Officer, waiting for the Employment Exchange list affects considerably the normal working of the classes for which a teacher is urgently required.

Direct payment will create serious disciplinary problems and bring down efficiency in existing schools.

II. RECOGNITION OF SCHOOLS:

15. Is the existing procedure for recognising schools and the conditions that govern such a recognition satisfactory and adequate? If not what suggetions have you on the subject?

There must be a statutory rule that when the conditions for recognition are fulfilled, recongnition should be given automatically and not continued on a temporary basis. The statutory rules should be revised so as not to include impossible conditions such as five acres of land for playground in a city.

Temporary recognition should be made permanent after a definite period, say 10 years, even if there are some clauses which cannot be or are not fulfilled, e. g. full complement of trained teachers; playground etc.

III. APPOINTMENT AND PROMOTIONS OF TEACHERS AND THEIR SERVICE RULES:

16. At present the managements are vested with the sole authority in the matter of appointment of teachers and their promotion. Do you feel that this should be the case or do you have any alternate suggestions?

The present system continue and no change need be contemplated.

17. There are definite rules governing the appointment of teachers in aided Elementary Schools, particularly relating to the nature and tenure of such appointment. Have you any suggestion to effect further improvement in the matter ? Would you advise the application of such rules to the appointment of all teachers under all types of aided schools ?

Not necessary.

18. The form of agreement between the teacher and the management defines the service conditions of teachers in High Schools. Do you feel it is adequate ? If not, please suggest a set of service rules for teachers under aided managements. Will it be advantageous to apply the Classification, Control and Appeals Rules of the Government of Tamil Nadu to teachers uuder aided management with such changes as may be necessary with reference to the needs of the service ?

The form of agreement now existing is defective in some particulars, particularly to the role of managements. Certain clauses newly added should be removed and a time fixed for the disposal of appeals by the Government or the statutory rules of the Government may apply as suggested in the latter part of the para without making any changes in them. The abrogation of Note under Clause 10 is strongly recommended. Further proviso (a) in Clause 7 (i) as also sub-clauses 4. (1) under Clause 7 in the agreement are, for all practical purpose a dead letter, as the teacher has a right to continue in either case as per note to clause 10 (10. B) till the teacher's appeal is disposed of. This anamoly may be removed by laying down that in the case of termination of service summarily or on payment of 3 months salary in lieu of notice, the teacher should stay away during pendency, To safeguard the interest of teachers it is suggested that when a teacher is suspended or dismissed, he should be relived immediately so as to maintain discipline and harmony among the other teachers, but the managements may be allowed to claim his salary in the staff grant. When the Department approves the action of the management the amount collected for the salary of this dismissed or suspended teacher would be refunded to the Treasury. If, on the otherhand the teacher wins the appeal and the management is asked to reinstate him the collected salary will be paid to him. Transfers between schools run by the same management must be included in the agreement; also if the appeal is not disposed of within three months, the punishment by the management will be taken as being approved.

19. How and in what mannuer should disputes between teachers and management be settled ? What in your view are the advantages and disadvantages in following one of the three methods of settling disputes—arbitration, judicial action, departmental action—and what machinery would you suggest for the method you think best for settling disputes ?

In the case of disputes between individual teachers and managements, there is provision for appeals. No further machinery is necessary.

## V. SERVICE AND RETIREMENT BENEFITS TO TEACHERS:

20. While the scales of pay are common for teachers under all managements, there are slight differences in the matter of payment of special allowances and retirement benefits between teachers of the same category but working under different types of managements. What are your views on the subject?

Uniformity between Government; Local Boards and private Managements be aimed at in the matter of payments of salaries, allowances, leave rules and retirement benefits etc. Managements may be left free to confer any additional benefits on teachers for their long or meritorious service, without any interference from the Department.

## V. THE NECESSITY OR OTHERWISE OF STATUTORY RULES:

21. Should the rules relating to elementary and high schools be made statutory? If so what are the advantages and disadvantages of making the rules statutory?

Statutory rules are preferred as they bind both, managements and departmental officers. It is also brought to the notice of the Government that while there are acts for University Education and for Elementary Education, there is none for Secondary Education. It is believed that a draft for a Secondary Education Act has been prepared. The question may now be revived and action taken.

## VI. CONDUCT RULES FOR TEACHERS:

Teachers working in Government schools are governed by Conduct Rules common for all Government Servants. What are your views on extending the application of such rules to teachers under all managements?

If uniformity is brought about amongst the different types of managements (Government, Local Bodies, Private) in regard to pay, allowances and other facilities etc., the Government Conduct Rules may naturally be extended to teachers under all managements.

## VII. NON-TEACHING STAFF:

25. In the case of Non-teaching staff all the benefits and service conditions enjoyed by the teachers be extended in full to the members of Non-teaching staff.

K. L. PALANISAMY, B.A., L.T.,
Secretary.

# சிந்தனைச் செல்வங்கள்

[ தொகுப்பு: துரை. முருகேசன் ]

❊

1. மொழிகள் என்பவை அறிவு உபயோகிக்கும் நாணயங்களே யாகும். அரசாங்கத்திடம் பொருளில்லை யெனில் நாணயங்கள் செலாவணியாகா; அதுபோல் பொருளில்லாத மொழிகளும் பயன்படா.

—கோல்டன்.

2. பேசிவிட்ட வார்த்தை, தொடுத்துவிட்ட அம்பு, கடந்து விட்ட காலம், இழந்துவிட்ட வாய்ப்பு—இந்த நான்கையும் திரும்பிப்பெற முடியாது.

—இபின் ஆல் அலீப்.

3. திருமகள் போலும் அழகுடைய தம் மனைவியை நீங்கிப் பிறன் மனைவிமேல் ஆவல் கொள்ளும் பேதையர், இனிய பொருள் தம் வாயிலிருந்து தின்னாது உமிழ்ந்து கைப்புள்ள பொருளைத் தின்னும் விலங்குகளுக்கு ஒப்பாவார்.

—நீதிநெறி விளக்கம்.

4. நாணம் நீங்கினால் செல்வங் கெடும்: ஐம்பொறிகள் தன் வழிப் பட்டால் வினை கெடும்; நீரற்றால் பசும் பயிர்களின் விளைவின் நலங் கெடும்; நன்மை மாறினால் நட்புக் கெடும்.

—நான்மணிக் கடிகை.

5. அறியாமையில் மூழ்கிய ஆயிரம், ஆயிரம் பேர்களின் வாக்கை விட, அறிந்தவர்கள் இருவரின் வாக்கே மேன்மையானது.

—சாக்ரடீஸ்.

6. காவி உடையைக் கண்டு மயங்கமாட்டோம். கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவி அணிந்து, மக்களின் கண்களையும் மயக்க முடியும். சீலராக இருக்கிறாரா என்பதைக் கண்டறிய உடையை அல்ல, செயலையே கவனிப்போம்.

—அண்ணாதுரை.

# தமிழ்நாட்டின் தலைநகரில் தேசிய விருதுபெற்ற தலைமை ஆசிரியர்

❋

தென்னகத்தின் பொன்னகராம் சென்னைத் திருநகரில் எத்திசையும் புகழ் மணக்கும் உயர்நிலைப் பள்ளியாகத்திகழ்கின்ற டாக்டர் குருசுவாமி முதலியார் தொ. து. வே. உயர்நிலைப்பள்ளியின் மதிப்பிற்குரிய தலைமை ஆசிரியர் திரு. C. N. மீனாட்சி சுந்தரம், பி. ஏ; எல். டி. அவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவர் அளிக்கும் தேசிய விருதுக்கு உரியவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை அறிந்து உவகை கொள்கின்றோம். உள்ளம் பூரிக்கின்றோம். மகிழ்ச்சி பொங்கப் பாராட்டுகின்றோம். சென்னை மாநகரில் நூற்றாண்டு விழாக் கொண்டாடிப் பெருமை பெற்ற தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியப் பணியைத் தொடங்கி, தன்னுடைய உழைப்பாலும் திறமையாலும் உயர்ந்து டாக்டர் குருசுவாமி முதலியார் தொ. து. வே. உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஆனார். நல்லாசிரியர்க்கு உரிய இலக்கணங் கள் அனைத்தும் ஒருங்கே வாய்ந்தவர். பழகுதற்கினிய பண்பாளர். காட்சிக்கு எளியவர். கருமம் சிதையாமல் கண்ணோட்டம் காட்டு பவர். பெரியவர்களை மதித்துப் போற்றுகின்ற பெருந்தன்மை வாய்ந் தவர். மாணவர்களிடத்தில் அன்னைபோல் அன்பு காட்டுபவர். தவறு கண்டபோது தந்தைபோல் இடித்துக் கூறித் திருத்தும் கடமை வீரர். பிற்பட்ட நிலையில் உள்ள மாணவர்களுக்கும்கல்வியில் ஆர்வமூட்டி மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது அவர்கள் உளம்கொளக் கற் பித்து முதல் மாணவர்களாகத் திகழுமாறு செய்யவல்ல வித்தகர். எனவேதான் மாணவர்கள் இப்பெருந்தகையாளரைத் தங்கள் இதயக் கோயிலில் வைத்து வணங்கும் அன்புத் தெய்வமாகக் கருதுகின்றார்கள். கல்வித்துறையில் இவர் ஆற்றிய தொண்டுகள் அளவிடற்கரியன.

ஆசிரியர்கள் மேலும் கல்வி கற்று வாழ்வில் உயர்வதைக் கண்டு பெருமகிழ்ச்சி கொள்ளுபவர். சென்னைமா நகரில் எஸ். எஸ். எல். சி. தேர்விற்குச் செல்லுகின்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு 1947ஆம் ஆண்டு வரையில் கணித பாடம் கற்பித்ததைத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் என்றும் மறக்கமாட்டார்கள். 1957ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் காலஞ்சென்ற மத்திய உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லபபந் தலைமையில் கல்விச் சீரமைப்பு மாநாடு சிறப்புற நடைபெறுதற்கு உறுதுணையாக இருந்து இவர் ஆற்றிய தொண்டுகளை ஆசிரிய உலகம் நன்கு அறியும். 1959ல் டில்லியில் நடைபெற்ற உலகக் கல்வி மாநாட்டிற்குத் தமிழகக் கல்வித்துறை இப்பெரு மகனுரைச் சிறப்பு உறுப்பினராக அனுப்பியது. அந்த மாநாட்டில் கல்வி வளர்ச்சிக்குரிய அரிய கருத்துக்களை எடுத்துரைத்தவர். செங்கற்பட்டில் இராஜேஸ்வரி வேதாசலம் உயர்நிலைப்பள்ளி தோன்றுவதற்கு முதற் காரணமாக இருந்தவர். சென்னை ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கியில் 1957ஆம் ஆண்டிலிருந்து செயற்குழு உறுப்பினராக இருந்து பலரும் போற்றும் வகையில் தொண்டாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்று வருபவர். இத்தகைய தொண்டுள்ளம் படைத்த—முப்பத்துநான்கு ஆண்டுகள் சீரியமுறையில் கல்விப் பணிபுரிந்த—ஆசிரியச் செம்மலுக்குக் குடியரசுத் தலைவர் அளிக்கும் தேசிய விருது கிடைத்திருப்பது மிகவும் பொருத்தமானது; பாராட்டிற்குரியது. விருதுபெற்ற தலைமை ஆசிரியர் மேலும் பல பெருமைகளைப் பெற்று நலமுடன் இன்னும் பல்லாண்டுகள் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகின்றோம்.

# நாகரிகத் தொட்டில்

[ துரை. முருகேசன் ]

ஆதி மனிதன் அடர்ந்த காடுகளில் இலை தழைகளைக் கட்டி, மரவுரி தரித்து விலங்கோடு விலங்காய்த் திரிந்தான். உடல் முழுவதும் முடிமுளைத்து, மனிதனுக்கும் மிருகத்திற்கும் வேறுபாடு தெரியாமல் மரப் பொந்துகளிலும், குகைகளிலும் வாழ்ந்து திரிந்த மனித வாழ்க்கையில் காலப் போக்கில் மறுமலர்ச்சி தோன்ற ஆரம்பித்தது.

ஓரிடத்தில் நிலையின்றி அலைகடலாய்த் திரிந்தவன் ஓரிடத்தில் நிலையாய்த் தங்க ஆரம்பித்தான்.

நிலையான வாழ்வைத் துவக்கினான்.

காட்டு வாழ்வு கசந்தது. கழனி வாழ்வு கவர்ந்திழுத்தது. வளமான இடங்கள்—வளைந்தோடும் வற்றாத ஆறுகள்—பேரருவிகள்—கவின்மிகு சோலைகள் எல்லாம் அவன் மனத்தைஈர்த்தன.

வெறுப்பூட்டும் வேட்டைத் தொழிலை விட்டொழித்தான். விருப்பமூட்டும் விவசாயத்தில் ஈடுபட்டான். காடு கழனி ஆயிற்று. புல் விளைந்த பூமி நெல் விளையும் பூமியாயிற்று.

காய், கனி, கிழங்கினைத் தின்று காட்டாற்று நீர் குடித்து, மலையிலும் குகையிலும், மரங்களின் செறிவிலும் வாழ்ந்து, மான்தோலையும், மரப்பட்டைகளையும் கொண்டு தன் மேனி மறைத்து மானங் காத்து வாழ்ந்த மனித இனத்தின் வாழ்க்கையில் மாபெரும் மறுமலர்ச்சி ஒளிவிட ஆரம்பித்தது.

மனிதனா ? மிருகமா ? என்று வேறுபாடு தெரியாமல்வாழ்ந்தவன் ஆற்றோரங்களில் தங்கிய பிறகு அவனது பழக்க வழக்கங்களின் மாறுபாட்டால் சிறிது சிறிதாகநாகரிகம் பெற்று ஆறறிவு பெற்ற மனிதனாக வாழத் தலைப்பட்டான்.

ஆதி மனிதர்கள் தங்கிய இடங்கள் : யூபரிடீஸ், டைகிரிஸ் நதிச் சமவெளிகள், எகிப்தில் நைல் நதிக்கரை, மற்றும் யாங்சிடியாங் நதிக்கரை, சிந்து கங்கைச் சமவெளி, காவிரி நதிக்கரை. இந்த இடங்களில்தான் ஆதி மனிதன் நாகரிக வாழ்வு மலர ஆரம்பித்தது. ஆகையால் இந்த இடங்கள் “ நாகரிகத் தொட்டில்கள்” எனப்படுகின்றன.

நாகரிகத் தொட்டில்களில் ஒன்றான எகிப்து தேசம் இன்று

உலக அதிசயங்கள் என்று நாம் வியந்து போற்றும் பல அதிசய— அற்புதங்கள் நிறைந்த நாடாய் விளங்குகிறது. எகிப்தின் வரலாறு — அங்கு வாழ்ந்த முன்னோர்கள்— அவர்களின் பழக்க வழக்கங்கள்— அவர்களுக்கிருந்த கலை ஆர்வம், ஆற்றல் மிக்க அழகு மிகுந்த கலைப் படைப்புகள் முதலியவற்றை அறிய நமக்கு ஆவலும், ஆர்வமும் மிகத் தோன்றி வியப்பு மேலிடுகின்றது.

எகிப்து நாகரிகம் கி.மு. 10,000ல் [பத்தாயிரத்தில்] தொடங்கியிருக்கலாம் என்று [Flinders Petric] "பிளின்டர்ஸ் பெட்ரி" என்பவர் கூறுகின்றார். வரலாற்றுத் தந்தை என்று புகழப்படும், 'ஹெரடோடஸ்' என்கிற சரித்திர ஆசிரியர் எகிப்தை "நைல் நதியின் நன்கொடை" என்று குறிப்பிட்டார்.

நைல் நதியின் நீளம் 6,700 கிலோ மீட்டர். அதன் வளம் மிகுந்த வடபகுதி, 'கீழ் எகிப்து" என்றும், தென் பகுதி "மேல் எகிப்து" என்றும் சொல்லப்படும்.

கீழ் எகிப்தின் கடவுள் :—நாக தேவதை

மேல் எகிப்தின் கடவுள் ;— கழுகு தேவதை.

கி.மு. 3400ல் மெனஸ் என்ற மன்னன் எகிப்தை ஆண்ட காலம் முதல் கி.மு. 332ல் எகிப்தைக் கைப்பற்றிய அலெக்ஸாண்டர் காலம் வரை எகிப்தை முப்பத்தொரு வமிசங்கள் ஆண்டதாகத் தெரிகின்றது.

மெனஸ் மன்னன் ஆண்டபொழுது கீழ் எகிப்தையும் மேல் எகிப்தையும் ஒன்றாக்கி அரசாண்டான். அவனுடைய தலைநகரம் மெம்பிஸ். அங்கே இம்மன்னனால் கட்டப்பட்ட "வெண்மதில்" [White wall] இன்றும் எழில் மிக்குடையதாய் விளங்குகின்றது.

எகிப்தியர் சுமார் நாலாயிரம் ஆண்டுகளாகக் காளையை வழிபட்டு வந்திருப்பதாகத் தெரிகின்றது. இதற்குச் சான்றாக மெம்பிஸில் கிடைத்த நார்மர் கல்வெட்டுப் பலகை விளங்குகிறது.

மூன்றாவது வமிசத்தைச் சேர்ந்த "ஐயம் ஹிடெட்" [Iem Hetet] காலத்தில்தான் 'ஸக்காரா' [Sakkarah] என்னுமிடத்தில் படிகளையுடைய 'பிரமிடு' கட்டப்பட்டது.

பிரமிடுகள் என்பவை அரசர்களின் கல்லறைகளாகும். கி.மு. 3000 முதல் 2500 வரையிலுள்ள காலத்தில்தான் பிரம்மாண்டமான பெரிய பிரமிடுகள் கட்டப்பட்டன.

உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் மிகப் பெரிய பிரமிடு 'கீஸா' [Gizah] என்னுமிடத்தில் கட்டப்பட்டதாகும்.

நைல் நதிக் கரையிலுள்ள முக்கியமான இடம் "கீஸா". இந்த இடத்தில் மிகப் பழமையான மூன்று பிரமிடுகளும், நூற்றுக்

கணக்கான கல்லறைகளும் காணப் படுகின்றன.

நான்காவது வமிசத்தைச்சேர்ந்த 'கியோப்ஸ்' [Cheops] என்பவர் கி மு. 2784ல் மிகப் பெரிய பிரமிடை பல லட்சம் பேரைக் கொண்டு கட்டினுன். அந்தப் பிரமிட்டைக் கட்டி முடிக்க இருபது ஆண்டுகள் ஆயிற்ரும். அவனை எகிப்தியக் கல் வெட்டுக்கள் 'குபு' [Khufu) என்று அழைக்கின்றன.

காண்போரை வியப்புக் கடலில் மூழ்கடிக்கும் அந்தக் 'கிஸா' பிரமிட்டின் உயரம் 137 மீட்டர். (சுமார் 446 அடி); அதன் ஒரு பக்கத்து நீளம் 277 மீட்டர். (சுமார் 900 அடி)

மனிதர்களால் உண்டாக்கப் பட்ட 'செயற்கை மலை' என்று கூறப்படும் பிரமாண்டமான இந்தப் பிரமிட் வானளாவ உயர்ந்து கம்பீரமாய்க் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. அது $12\frac{1}{2}$ ஏக்கரா நிலப் பரப்பை அடைத்துக் கொண்டிருக்கிறது.

இதைக் கட்டுவதற்கு இருபத்து மூன்று லட்சம் பெரிய பாறைகள் பயன்படுத்தப் பட்டனவாம். ஒவ்வொரு கல்லும் 3 மெட்ரிக் டன் எடையுடையது.

அந்த ஒரு பிரமிட்டுக்கு மட்டும் பயன்படுத்திய கற்களை வைத்துக் கொண்டு இக்காலத்தில் $1\frac{1}{2}$ லட்சம் பேர் வசிக்கக் கூடிய அழகிய நகரம் ஒன்றை நிர்மாணிக்க முடியுமாம்.

பிரமிட்டின் வாயில் அதன் வடக்குப் புறத்தில் தான் அமைந்திருக்கும்.

இரண்டாவது பிரமிடு கெப்ரன் என்ற மன்னனுல் கட்டப்பட்டது. இதற்குச் சற்றுத் தொலைவில் சிங்க உடலும், மனித முகமும்கொண்ட 'ஸ்பிங்ஸ்' என்ற பெரிய சிலை காணப்படுகிறது. இதில் இரு பாதங்களுக்கிடையில் வரலாற்றுச் சான்று உள்ள சாஸனம் ஒன்று காணப்படுகின்றது.

இதன் உயரம் 20 மீட்டர். நீளம் 73 மீட்டர். பல 'ஸ்பிங்ஸ்' சிலை வடிவ உருவத்திலும், பிரமிடுகளிலும், விலை மதிப்புமிக்க பொருள்கள் இருக்குமெனை, பலர் கொள்ளையடித்துள்ளனர். பற்பல சந்தர்ப்பங்களில் கொள்ளையர்கள் ஸ்பிங்ஸின் தலையைக் குறியாக வைத்துத் துப்பாக்கி சுடும் பயிற்சி செய்து வந்தார்களாம். ஆனுல், அந்த 'ஸ்பிங்ஸ்' துப்பாக்கிக் குண்டுகளைத் துச்சமென மதித்து இன்றும் அன்று போல் கம்பீரமாகவே காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

கிஸா பீடபூமி முழுவதும் பிரமிடுகளாகவேகாட்சியளிக்கின்றன. உலகத்தின் மிகப் பழமையான கட்டடம் 'ஸக்காரா' என்னுமிடத்திலுள்ள மூன்ருவது வமிசத்தின் இரண்டாவது மன்னன் 'ஸோஸர்' கி.மு. 3000-த்தில் கட்டிய ஆறடுக்குப் பிரமிடு ஆகும்.

இந்தப் பிரமிட்டைச் சுற்றி 7 மீட்டர் உயரமுள்ள சுவர் அழிந்த நிலையில் தோற்றமளித்துக் கொண்டிருக்கிறது.

ஆறடுக்கு உள்ள இப் பிரமிட்டின் ஒவ்வொரு அடுக்கும் சுமார் 9 மீட்டர் மேலாக உயர்ந்துள்ளது. மொத்தம் இந்தப் பிரமிட்டின் உயரம் 61 மீட்டர். இந்தப் பிரமிட்டே எகிப்தியக் கட்டடக் கலைக்குச் சான்றாய் விளங்குகிறது.

கார்னக் என்னுமிடத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் கோயில்கள் உள்ளன.

அங்குள்ள சூரியன் கோயிலும் எகிப்தியக்கட்டடக்கலைக்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாய் விளங்குகிறது.

இக்கோயிலின் முகப்பு கோபுரத்தின் உயரம் 43 மீட்டர். அகலம் 96 மீட்டர். 13 மீட்டர் கனமும் கொண்டது. சூரியன் கோயில் சுமார் 21 ஹெக்டேர் [சுமார் $52\frac{1}{2}$ ஏக்ரா] நிலப் பரப்புடையதாகும்.

அக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் 2 79,809 ஹெக்டேர். 65 நகரங்கள் அக்கோயிலுக்குச் சேர்ந்தன. 4 21,262 கால் நடைகள் அக்கோயிலுக்கு உரியவையாயிருந்தனவாம். கோயில் வேலை செய்த அடிமைகளின் எண்ணிக்கை 81,322 பேர்களாகும்.

எகிப்து வரலாற்றுப் பெருமை மிக்க நாடாகும். உலகில் தோன்றிய நாடுகளுள் பழமையான நாடு. அதன் வரலாற்றை அறிய பல நாட்டு அறிஞர்கள் முற்பட்டனர். பிளின்டர்ஸ் பெட்ரி, வாலிஸ்பட்ஜ், ஹோவார்டு கார்ளர் முதலியவர்கள் குறிப்பிடத் தக்க ஆராய்ச்சியாளர்கள்.

**கிளியோ பாட்ரா கூம்புப் பாறை**:—சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன். 'ஹீலியோ போலி' என்னுமிடத்தில் சுமார் 21 மீட்டர் உயரமுள்ள ஒரே கற்பாறை எழுப்பப்பட்டது. இதில் ஓவிய எழுத்துக்கள் காணப்படுகின்றன. இது ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரும் புதிராய் விளங்குகிறது.

இந்தப் பாறையை பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் 10,000 பவுன் விலை கொடுத்து இலண்டன் பொருட்காட்சி சாலைக்கு அனுப்பி வைத்தாராம். இந்த வரலாற்றுக் கற்பாறையை இன்றும் இலண்டன் பொருட் காட்சிசாலையில் பார்க்கலாம்.

**ரொஸெட்டாக் கல்**:—[Rosetta Stone] இதைக் கடவுள் தந்த வரப் பிரசாதம் என்பர். ஏன் தெரியுமா? கிளியோ பாட்ராக் கூம்புப் பாறையிலுள்ள சித்திர எழுத்துக்களின் விளக்கத்தை முற்பகுதியில், எகிப்தியப் பழைய எழுத்து, 'ஹீரோ கிளிபிக்', இரண்டாம் பகுதியில் 'டெமோடிக்' (Demotic) என்னும்மக்கள்வழக்கத்திலுள்ள உலகவழக்கு எழுத்துக்கள், மூன்றும் பகுதியில் எல்லாரும் எளிதில் புரிந்து கொள்

ளும் வகையில் இரேக்க எழுத்து— ஆகியவற்றில் பல வரலாற்று உண் மைகள் எழுதப்பட்டுள்ளன.

இதன் மூலம் எகிப்தைப் பற்றிய பல உண்மைகளை அறிய முடிகின் றது. ரோஸெட்டா என்பது நைல் நதி கடலோடு கலக்குமிடத்தில் அதிலிருந்து பிரியும் கிளை நதிகளில் ஒன்றாகும். இங்கு கி.பி. 1779ல் எகிப்தைக் கைப்பற்ற நெப்போலி யன் முயன்றபோது, அவரது போர் வீரர்கள் ஆற்றுப் படுகை களில் பதுங்கு குழிகள் வெட்டி னார்களாம். அப்பொழுது இந்தக் கல் பாறை வரலாற்று வல்லுநர் களுக்கு வரப் பிரசாதம் போல் கிடைத்தது.

பேபரைஸ் :— அழகு தவழும் நைல் நதிக் கரையின் சதுப்பு நிலங் களில் பேபரைஸ் என்னும் ஒரு வகைக் கோரைப் புற்கள் ஏராள மாய் வளர்கின்றன. அந்தக் கோரைகளின் உள் பகுதியை நீக்கி, அதை உலர வைத்து, நைல் நதி நீரையும், ஒரு விதப் பசையை யும் சேர்த்து அதை ஒட்ட வைத்துப் பெரிய சுருளாகச் செய் வார்கள். பின்னர், கருமை நிறத் தில் பிசின் போன்ற ஒரு மையால் எழுது கோலால் எழுதுவார்கள்.

அவர்கள் பெரும்பாலும் பேய், பூதம், பிசாசுகளின் பெயர்களையும் இறந்தவர்களுக்கு நடைபெறும் இறுதிச் சடங்கில், இறுதிச் சடங்கு நூலில் [Book of the Dead] சிவப்பு மையாலேயே எழுதுவார் களாம்.

மரண விழா : எகிப்தில் இப்படியும் ஒரு விழா நடைபெற்று வந்துள்ளதாகத் தெரிகிறது. இது என்ன விழா ?

அங்கு அரசர்கள் பாரோக்கள் எனப் பட்டனர். அவர்கள் கடவு ளின் அவதாரமாகக் கருதப்பட்ட னர் அந் நாட்டில் ''சேத்'' [Sed festival) என்று ஒரு பெரு விழா நடைபெறும். இது உலகில் வேறெங்கும் காணாத அதிசய விழாவாகும். இவ்விழாவன்று, முப்பது ஆண்டுகள் நாட்டை ஆண்ட அரசனைச் சொர்க்கலோகம் செல்லத் தகுதியானவன் என்று கூறி, அவனைக் கொன்று விடுவார் கள். கொன்றவனைக் கொன்ற தோடு விட்டு விடுவதில்லை. அவ் வரசனது உடலை மக்களும், அவர் களுக்கு வேண்டியவர்களும் ஆனந் தமாக உண்டு மகிழ்வார்களாம்.

அந்த அரசனின் உடலை உண் பதால் தாங்களும் தெய்வாம்சம் பொருந்தியவர்களாகக் கூடும் என்பது அவர்களது அக்கால நம் பிக்கை ! ஐயகோ ! இஃது என்ன மடமை ! கொடுமை !

இறந்த அரசனைப் புதைக்குமுன் அவன் உடலைத் தங்கத்தாலான பெட்டியில் வைத்து, அதை ஒரு மரப் பெட்டியில் வைத்து மூடுவர். பின்னர் அந்த மரப் பெட்டியை இன்னொரு மரப் பெட்டியில் வைப்பார்களாம். கடைசியில் மூன்றாவது பெரிய மரப் பெட்டியில் அந்த சவப் பெட்டியை வைத்து மூடுவார்களாம். அதை அடக்கம் செய்வார்கள்.

ஓர் அரசன் இறந்து விட்டால், அவன் விரும்பி உண்ணும் உணவு, ஏராளமான ஆடை, ஆபரணங்கள் இவற்றை பிரமிடு எனப்படும் கல்லறையில் வைப்பார்கள். அதோடு, அந்தோ பரிதாபம்! மன்னனின் மனங் கவர்ந்த ராணி, உறவினர்கள் சிலர்—இவர்கள் எல்லாரையும் இறந்த சவத்தோடு, பிரமிடுகளில் விட்டு வெளிப்புற வாயிலை அடைத்து விடுவார்களாம். பிறகு! சென்றவர்கள் சென்றது தான்! அவர்களுக்கு உயிரோடு சமாதி! இப்படியும் ஒரு கொடிய வழக்கம்!

இறந்தவர்களின் உடல் "மம்மி" (Mammy) கள் எனப்படும். ஆயிரக் கணக்கான வருடங்களாகியும் இறந்தவர்களின் உடல்கெடாமல் இருப்பதின்இரகசியம் என்ன தெரியுமா?

ஈர வெங்காயத்தை பக்குவப் படுத்தி உடலைக் கெடாமல் பாதுகாக்கும் முறையை அவர்கள் அறிந்திருந்தார்கள். வெங்காயம் ஒரு கிருமி நாசினிப் பொருள். வெங்காயத்தின் அரிய சக்தியைப் பற்றி நம் நாட்டு மருத்துவ நூல்கள் பெரிதும் போற்றி எழுதுகின்றன.

எகிப்தியர் வணங்கிய தெய்வங்கள் 'ரா' அல்லது 'அமன்சா' என்பது பெரிய தெய்வம். இது சூரியன் தெய்வமாகும். 'அதன்' (Aten) என்பது மற்றொரு தெய்வமாகும். அவர்கள் சுமார் இரண்டாயிரம் தெய்வங்களை வழிபட்டதாகத் தெரிகின்றது.

# உலகத்துப் பழமொழிகள்

ஒரு யானை உதைத்தால் அதை இன்னொரு யானையால் தான் தாங்கிக்கொள்ள முடியும்.

—ஆப்ரிக்கா

ஆணும் பெண்ணும் தனியாக இருக்கும்போது அவர்களுக்கிடையில் ஒரு உறுதியான சுவர் இருக்கவேண்டும்.

—ஜெர்மனி

உன்னுடைய சந்ததிகளுக்கு இரண்டு சரியான பாதையைக் கற்றுக் கொடு. ஒன்று விவசாயம்—மற்றொன்று இலக்கியம்.

சீனு

நாளை கிடைக்கும் கோழியைவிட இன்று கிடைக்கும் முட்டை மேலானது.

—அல்போனியா

வார்த்தைகள் ஈட்டி அல்ல—ஆனால் அது இதயத்தைத் துளைக்க முடியும்.

—பிரான்ஸ்

பெண்ணில்லாத வீடு பேய் வாழும் இடம்.

—இங்கிலாந்து

மாமி பெரியவள்; மருமகளும் பெரியவள்; பானை பொங்குகிறது—யார் பானையைக் கீழே இறக்கி வைப்பது.

—இந்தியா

இரைதான் தூண்டியை மறைக்கிறது—இதை மீன்கள் மட்டுமல்ல, மனிதர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

—பர்மா

உண்மையைச் சொல்ல பத்து வாய் தேவை. பொய் சொல்ல ஒன்று போதும்.

—ஜெர்மனி

மனைவிக்கு வேலி கணவன்—ஆனால் வேலியே பயிரை மேய்ந்து விடக்கூடாது.

—பர்மா

இளமை நம்பிக்கையில் வாழ்கிறது; முதுமை பழைய நினைவில் வாழ்கிறது.

—பெல்ஜியம்

—"முத்தாரம்"

# தமிழ் நாடு உதவிபெறும், ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, நிர்வாகிகள் சங்கம்

*99-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை–1.*

※

# உதவிபெறும் ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, பாடசாலைகளின் சீர்திருத்தக் குழுவினர் அனுப்பிய கேள்விகளும், அதற்கான விடைகளும்.

●

G. O. No. 848. *தேதி 18—6—69.*

## I. (i) பாடசாலைகளை நிர்வகிக்கும் குழுக்கள் :

*1. பாடசாலை நிர்வாகக் குழு எப்படி அமையவேண்டும் ?*

இந்துக்கள், முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் முதலிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவரவர்கள் கோட்பாட்டின்படி குழுக்களை ஏற்படுத்தி, அதன் மூலம் பாடசாலைகளைக் குழுவின் அங்கத்தினர்கள் எப்படி நிர் வகிக்க வேண்டும் என்ற சட்ட திட்டங்களை வகுத்து, அவைகளை (Society Registration Act, or Indian Company's Act.) முதலிய சட்டங்களின்கீழ் ரிஜிஸ்தர் செய்து இருக்கிறார்கள். ஆதலின் அக்குழுக்களில் கல்வி இலாகாவோ, அரசாங்கமோ தலையிடுவதற்கு இல்லை. ஆதலின் தற்போதுள்ள முறைப்படியே குழுக்கள் இருக்கலாம்.

*2. தற்போதுள்ள நிர்வாக குழுக்களின் பொறுப்புகள் என்ன? அவை எப்படி செயல்பட வேண்டும் ?*

இக்குழுக்கள் செயல்பட வேண்டிய சட்ட திட்டங்கள் ஆற்ற வேண்டிய முறைகளையும், பொறுப்புக்களையும் அந்தந்தக் குழுக்களே சட்ட திட்டங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இதில் அனாவசியமாக அரசாங்கம் தலையிடத் தேவையில்லை.

3. இக்குழுக்களின் அங்கத்தினர்களை எப்படித்தேர்ந்தெடுப்பது? அவர்களின் யோக்யதாம்சங்கள் என்ன ?

அங்கத்தினர்களை தேர்ந்தெடுத்தல், யோக்யதாம்சங்கள் முதலியவைகள் அக்குழுவின் சட்ட திட்டங்களிலேயே (Byelaw prescribe the constitution of the committee) அடங்கி இருக்கிறது.

4. பண சம்பந்தமான விஷயங்களில் பொறுப்பேற்று காரியங்களைச்செய்ய இக்குழுக்களுக்கு என்னென்ன உத்தரவாதங்கள் தேவை ?

அரசாங்கமே மாதாமாதம் ஆசிரியர்களுக்கும் பாடசாலை ஊழியர்களுக்கும் பணம் கொடுத்துவருவதால் நிர்வாக குழுவுக்கு எத்தகைய உத்திரவாதங்களும் தேவையில்லை.

## (ii) நிர்வாகிகள் :

5. பாடசாலை நிர்வாகிகளை யாரால் எப்படி நியமிப்பது ?

Articles of Association and rules of the Society registered under the Indian Company's Society Act or the Trust Act etc.) முதலிய சட்டங்களின்கீழ் சட்ட திட்டங்களுடன் நிர்வாகக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், மேற்படி சட்ட திட்டங்களின்கீழ் நிர்வாகிகளை நியமிக்க வழி செய்யப்பட்டிருக்கின்றன. இதில் அரசாங்கம் தலையிடத் தேவையில்லை.

6. பாடசாலை நிர்வாகிகளுக்கு எத்தகைய தகுதி இருக்கவேண்டும் ? அவர்கள் எவ்வளவு காலத்திற்கு இருக்கவேண்டும் ?

நிர்வாகிகளின் காலம், தகுதி, நிர்வாக குழு, அதிலுள்ள அங்கத்தினர்கள் அனைத்தும் அவர்கள் வகுத்துள்ள சட்ட திட்டங்களையும், விதிகளையும் பொறுத்தது. அரசாங்கத்திற்குச் சம்பந்தமில்லாதது.

7. ஆசிரியர்களை வைத்துப் பாடசாலை நிர்வாகத்தை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் திருப்திகரமாக நடத்த நிர்வாகிக்கு எத்தகைய அதிகாரங்கள் இருக்கவேண்டும் ?

பாடசாலைகளை நிர்வகிக்க சகல பொறுப்புகளும் கமிட்டி அங்கத்தினர் நிர்வாகிக்குக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கும் பணத்தை நிர்வாகி எவ்விதம் பட்டுவாடா செய்யவேண்டும் என்கிற

வழிமுறைகளை தற்போது M. E. R.-ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளே போதுமானது.

### (iii) அரசாங்கமும் நிர்வாகக் குழுவும் :

8. புதுப் பாடசாலைகள் திறக்க அரசாங்கம் அனுமதிக்கும்போது அப்பாடசாலைகளின் நிர்வாகக் குழு அமைத்து அதை ரிஜிஸ்தர் செய்யும்படி வற்புறுத்தவேண்டுமா? அந்தக் குழுவை அரசாங்கம் அங்கீகரிக்கலாமா, அப்படியானால் அதன் நிபந்தனைகள் என்ன ?

பொதுவாக எல்லா உயர்தர பாடசாலைகளும் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட குழுவின் மூலம்தான் நடத்தப்படுகின்றன. அக்குழுக்கள் பல சட்ட திட்டங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆதலின் அக்குழுவை மறுபடியும் அரசாங்கம் அங்கீகாரம் செய்யத் தேவையில்லை.

ஆரம்பப் பாடசாலை பொறுத்தமட்டில் தனிப்பட்ட, தனியார் பாடசாலை திறக்க அங்கீகாரம் கேட்டால் அவரை ஒரு குழு அமைக்கும்படி வற்புறுத்துவது அல்லது ரூ. 20,000 முதல் வைக்கும்படி கேட்பது சரியல்ல. இதை நீக்கவேண்டும்.

9. தற்போது அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகிகளை எப்படி அங்கீகரிப்பது ? அதற்குண்டான நிபந்தனைகள் என்ன ?

உயர்தர பாடசாலைகளில் கமிட்டிகள் பொறுத்தமட்டில் அங்கீகாரம் தேவையில்லை. ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள் அங்கீகரிக்கும் விஷயம் தற்போது M. E. R.-இல் உள்ள சட்ட திட்டங்களே போதுமானது.

10. நிர்வாகக் கமிட்டியை அல்லது அதிலுள்ள அங்கத்தினர்களை எந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் நீக்கலாம் ?

இந்தக் குழுக்கள் பல சட்டங்களின்கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்டு இருப்பதால் அரசாங்கம் இதில் தலையிடக்கூடாது. அங்கத்தினர்களை நீக்கவும் உரிமை கிடையாது.

11. சில சந்தர்ப்பங்களில் இந்த குழுக்களை நிராகரிக்கவோ அதிலுள்ள அங்கத்தினரை நீக்கி வேறு அங்கத்தினர்களை நியமிக்கவோ அரசாங்கம் அதிகாரம் கொள்ளலாமா ?

அரசாங்கம் இத்தகைய விஷயங்களில் ஈடுபடுவது செல்லுபடியாகாது.(High Court)நீதி ஸ்தலத்திற்குமட்டுமே இத்தகையஅதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பாடசாலை அரசாங்கத்தின் சட்ட திட்டங்களின்படி நடக்கவில்லை என்றால் அப்பாடசாலையின் அங்கீகாரம் மட்டும் நீக்கலாமே ஒழிய, அப்பாடசாலையை மூடும்படி சொல்லவோ அல்லது கமிட்டி அல்லது அங்கத்தினர்களை நீக்கவோ அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. இதைப்பற்றி உயர்நீதி ஸ்தலத்தில் (High Court) பல தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது M. E. R. Rule 99-A படி கொடுத்துள்ள சட்ட திட்டங்களே போதுமானது.

12. அரசாங்க சட்ட திட்டங்களைமீறி நிர்வாக கமிட்டியும் நிர்வாகியும் நடப்பார்களானால் பாடசாலை ஒழுங்காக நடத்துவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம்?

இதற்கு 11-வது கேள்விக்கு கொடுத்த பதிலே பொருத்தமானதாகும்.

13. அரசாங்கமேஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுக்க முனைந்தால் அதனால் ஏற்படும் சாதக பாதகங்கள் என்ன ?

எக்காரணத்தைக் கொண்டும் ஆசிரியர்களுக்கு நேரடியாக அரசாங்கமே சம்பளம் பட்டுவாடா செய்வது உசிதமில்லை. இதனால் நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பிளவு ஏற்பட்டு பாடசாலையில் கல்வித் திறமையே பெரிதும் பாதிக்கப்படும்.

14. தற்போது சம்பளம் கொடுக்கும் முறையில் சாதக பாதகங்கள் என்ன ?

தற்போது அரசாங்கம் பணத்தை நிர்வாகிக்கு அனுப்பவும், அந்த நிர்வாகி ஆசிரியர்களுக்கு கொடுத்து கையெழுத்து வாங்கும் முறையே சிறந்தது.

கிராமப் பகுதிகளில் உதவிபெறும் பாடசாலைகளுக்குப் பஞ்சாயத் யூனியன் கமிஷனர் நிர்வாகிக்கு கிராண்ட் கொடுப்பதை மாற்றி, சென்னையில் இருப்பதுபோல் (D. E. C.) ஜில்லா கல்வி அதிகாரியே கிராண்ட் பில்லை நிர்வாகிகளுக்கு நேரிடையாக அனுப்ப விதிமுறை மாற்றப்பட வேண்டும்.

## II. பாடசாலை அங்கீகாரம் :

15. பாடசாலை அங்கீகரிக்க தற்போதுள்ள விதிமுறைகள் போதுமானதா ?

ஆரம்பப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு 20,000 ரூபாய் கேட்கப்படுகிறது. இது அவசியமில்லாத ஒரு விதியாகும். இதனால் அங்கீகரிக்கப் படாத நூற்றுக்கணக்கான பாடசாலைகள் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கி (Nurser Schools) நடத்தப்படுகின்றன. இந்த விதியை உடனே ரத்து செய்யவேண்டும்.

அதோடு நகர்புறங்களிலுள்ள சில ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கி நடத்த முன்வந்தால் அவர்களுக்கும் சம்பளம் வசூலிக்க அனுமதி அளித்து அங்கீகாரம் கொடுக்கலாம்.

## III. ஆசிரியர்களை வேலையில் வைத்துக்கொள்ளுதல், அதற்கான சட்ட திட்டங்கள் :

16. தற்போது ஆசிரியர்களை வைத்துக் கொள்ளுதல், அவர்களுக்கு உயர்வு கொடுத்தல் முதலியவைகள் நிர்வாகிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டுமா ?

தற்போதுள்ள முறையே போதுமானது.

17. ஆசிரியர்களை வைப்பது, அவர்கள் நீடித்து வேலை செய்ய வேண்டிய காலம் ஆகியவற்றுக்கென்று அமைந்துள்ள விதிமுறைகள் போதுமானதா ?

தற்போதுள்ள விதிகளே போதுமானது.

18. தமிழ் நாடு அரசாங்க ஊழியருக்குள்ள சர்வீஸ் ரூல்களை தனியார்துறை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தலாமா ?

அரசாங்க ஊழியர்கள் துறை வேறு, ஆசிரியர்கள் துறை வேறு. இதை ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தக்கூடாது. தற்போதுள்ள அக்ரிமெண்ட் முறையே போதுமானது.

19. ஆசிரியர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடையே ஏற்படும் சச்சரவுகளை எந்த முறையில் தீர்க்கலாம்?

தனியார்துறை ஆரம்பப் பாடசாலை பொறுத்தமட்டில் சச்சரவுகளை ஜில்லா கல்வி அதிகாரி முடிவு செய்கிறார். அந்த முடிவை எதிர்த்து அப்பீல் செய்ய டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சரியான முறை அல்ல. அப்பீல் செய்யப்பட்ட விஷயங்களில் 100க்கு 98 விதம் ஜில்லா கல்வி அதிகாரிகள் செய்யும் தீர்ப்புகளை ஒட்டியே டிவிஷனல் இன்ஸ்பெக்டர் தீர்ப்பு வருகிறது. இது நியாயமான முறை அல்ல. சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தபடி ஜில்லா கல்வி அதிகாரியின் தீர்ப்பை அரசாங்கத்திற்கு (Minister for Education) அப்பீல் செய்யும் உரிமை கொடுக்கப்படவேண்டும். அரசாங்கத்தின் உத்தரவு சரியில்லையென்றால் அதன் பிறகுதான் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென விதிகள் மாற்றப்படவேண்டும்.

## IV. ஆசிரியர்களின் ஓய்வு கால உதவி :

20. ஆசிரியர்களின்படி, ஓய்வுகால ஊதியம் பல நிர்வாகங்களில் வேறுபடுகிறது. அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தனிப்பட்ட நிர்வாகக் குழுக்களின் பண வசதியை பொறுத்தது. அதன்படி குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு அதிக ஊதிய உயர்வு போன்ற பல சலுகைகள் தருகின்றனர். இதில் அரசாங்கம் தலையிடவேண்டியதில்லை.

## V. விதிகளை சட்டமாக்குதல் :

21. ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றுக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளை (Rules) சட்டமாக்கப்படுவது (Statutory) அவசியமா?

விதிகளை (Statutory) சட்டமாக்குவது அவசியம்.

## V. ஆசிரியர்களின் ஒழுங்கு விதிகள் :

22. அரசாங்க பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் அரசாங்கம் ஊழியர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு முறை விதிகள் மற்ற நிர்வாகத்திலுள்ள ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தவேண்டுமா?

அப்படி ஏற்படுத்தவேண்டியது அவசியம். எல்லா நிர்வாகத்திலும் ஆசிரியர்களுக்கு அரசாங்க ஊழியர்களைபோல் ஒழுங்குமுறை அவசியம்.

**P. வீரராகவன்,**
தலைவர்.

குறிப்பு :—தமிழ் நாடு நிர்வாகிகளின் சங்கத்தின் சார்பாக திரு. **A. R.** சேஷாசலம் மாகாண சங்கத்தின் காரியதரிசி அவர்கள், அரசாங்கம் அமைத்த சீர்திருத்தக் குழுவில் ஓர் அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். சில மாவட்ட கழகங்களும் தனிப்பட்ட நிர்வாகிகளும் அனுப்பிய பதில்களை ஒன்று திரட்டி, மேற்குறித்த பதில்களை எழுதியுள்ளோம். இவை துணையாக வைத்துக் கொண்டு எய்டட் பாடசாலை நிர்வாகிகள் சங்கங்கள், நிர்வாகிகள், இன்னும் இத்துடன் சேர்த்தோ குறைத்தோ தங்கள், தங்கள் அபிப்பிராயங்களை, இன்னும் விளக்கமாக தமிழிலேயே எழுதி, கமிட்டியின் காரியதரிசிக்கு ஒரு நகலும், தலைமைச் சங்கத்திற்கு ஒரு நகலும் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

# கல்வித்துறை அறிவிப்புகள்

உதவி பெறும் உயர்நிலைப்பள்ளி களுக்கு இருப்பது போல் உதவி பெறும் தொடக்கப்பள்ளிகள் மற்றும் உயர் தொடக்கப்பள்ளிகள் திறப்பதில் உள்ளூர் பொது மக்க ளின் ஒத்துழைப்பைப் பெறுவ தற்கு, அரசாங்கம் அந்தந்தப் பள்ளி களில் அறக்கொடை (Endow ment) நிறுவப்படவேண்டுமென தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒவ்வொரு உதவி பெறும் தொடக்கப்பள்ளியின் பெயரிலும், ரூ. 20,000 அறக் கொடை நிதி, தேசியப் பாதுகாப்பு நிதிப்பத்திரங்கள், தேசியத்திட்ட நிதிப்பத்திரங்கள் அல்லது சென்னை தொழில் முதலீடு சங்கத்தின் 7 ஆண்டு விலைவைப்புத் தொகை போன்ற அரசாங்கப் பாதுகாப்புப் பத்திரங்களாகத் தொடங்கப்பட வேண்டும் என அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. மேற்சொன்ன அறக்கொடை நிதியில் ரூ. 10,000 உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும். மீதித்தொகையாகிய ரூ. 10,000 இரண்டாண்டு தவணை யில் ஆண்டிற்கு ரூ. 5000 வீதம் நிறுவப்பட வேண்டும். முதல் தவணை, பள்ளி திறக்கப்பட்ட ஆண்டில் மார்ச்சு மாதஇறுதிக்குள் செலுத்தப்படல் வேண்டும். இதே முறையில் ஓர் உதவி பெறும் உயர் தொடக்கப்பள்ளி துவக்குவதற்கு அறக்கொடை நிதியாக ரூ. 40,000 மேற்சொன்ன அரசாங்கப் பாது காப்புப் பத்திரங்களாக ஏற்படுத் தப்படவேண்டும். அறக்கொடை நிதியில் ரூ. 20,000 உடனடியாகச் செலுத்தப்படவேண்டும். மீதி ரூ. 20,000 ஆண்டிற்கு ரூ. 5000 வீதம் 4 ஆண்டுத் தவணையில் நிறு வப்படவேண்டும்.

[தமிழ்நாடு அரசாங்க ஆணை எண் 948, கல்வி தேதி 2—7—1969]

—"தமிழகக் கல்வி"

# கல்வித்துறைச் செய்திகள்

## யு. எஸ். வசம் 40 ஆயிரம் அணு ஆயுதங்கள்

### *சர்க்கார் கணக்கைவிட 4 மடங்கு*

அமெரிக்காவில் 40,000 அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்து, வைக்கப்பட்டிருக்கின்றன என்று "ட்ரு" என்ற அமெரிக்கப் பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

இக்கட்டுரையில் கண்ட தகவல்களில் பெரும்பாலானவற்றை ராஜாங்க இலாகா மறுத்த போதிலும், ராணுவ அமைப்புகளுக்கு அருகில் வசிக்கும் மக்களிடையில் இது பொதுவாகத் தெரிந்த விஷயம் என்று கட்டுரையாளர் கூறுகிறார். இதெல்லாம் ராணுவ ரகசியம் என்று கூறி ராஜாங்க இலாகா மறுத்துள்ளது.

இதற்கு முன் வெளியான உத்யோகபூர்வ சர்க்கார் தகவலின் பிரகாரம் 4200 ராணுவ தந்திர அணு குண்டுகளும், போர் உபாயங்களுக்கான 7000 அணு ஆயுதங்களும் இருந்ததெனத் தெரிகிறது. ஆனால் "ட்ரு" பத்திரிகை கட்டுரையாளர் வெளியிட்டுள்ள தகவலிலிருந்து அதைப் போல் நான்கு மடங்கு அணு ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிகிறது.

40,000 அணு ஆயுதங்கள் உள்ளன என்ற தகவலுடன் அவை வைக்கப்பட்டுள்ள இடங்களைக் குறிப்பிடும் நிலப்படமும்பிரசுரமாகி இருக்கிறது.

*சங்கம் அமைப்பு :*

## தனியார் பள்ளிகள் திறமையாக இருக்கவேண்டும் என்கிறார் நெடுஞ்செழியன்

மக்கள், அறிவாற்றல் உடையவர்களாகவும் பண்பாடு உள்ளவர்களாகவும் விளங்கச் செய்வதற்கு கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் தாய் மொழியையே பயிற்சி மொழியாகக் கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் இன்று இங்கு கூறினார்.

ஆங்கிலத்தைப் போதனை மொழியாகக் கொண்டுள்ள அங்கீகாரம் பெறாத நர்ஸரி, பிரைமரி பள்ளிகள் சங்கமான தனியார் பள்ளிகள் சம்மேளன துவக்க விழாவுக்கு அமைச்சர் நெடுஞ்செழியன் தலைமை வகித்துப் பேசினார். இந்த விழா நியூ உட்லாண்ட்ஸ் ஹோட்டலில் நடந்தது. பிரதேச மொழிகளின் அபிவிருத்தி. நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கியமானதாகக் கருதப்படவேண்டும். கல்வியின் தர வளர்ச்சிக்கும் இது முக்கியமான நடவடிக்கை என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ்ப் போதனமொழி என்பது அரசின் கொள்கை. அதற்காக ஆங்கிலமும் இதர உலக மொழிகளும் அகற்றப்படுவதாக பொருளாகாது.

தேவையுள்ளவரை நீண்ட காலத்துக்கு ஆங்கிலம் நீடிக்கும் என்றும், துவக்கப் பள்ளிகளில் ஆங்கிலம் திறமையாகப் போதிக்கப்படவேண்டுமென்ற கொள்கையையொட்டி மூன்ருவது ஸ்டாண்டர்ட் முதற் கொண்டே செகண்டரி பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வகை செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் பள்ளிகளைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் தனியார் துறையில் நர்ஸரி, துவக்கப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, செகண்டரி பள்ளிகளாக இருந்தாலும் சரி நல்ல முறையில் திறமையாக நடக்குமாளுல் வரவேற்கிறேரும் என்ருர். தனியார் பள்ளிகள், சிறந்த பணிகள், சாதனைகளைக் கொண்டு அங்கிகாரம் பெற முயல வேண்டும் என்ருர்.

இந்தச்சம்மேளனம் தனது மெம்பர்களுக்கு அங்கிகாரமுள்ள பள்ளிகளாக தங்களது பள்ளிகளை உயர்த்த உதவும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இப்பள்ளிகள் எம்மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு உள்ள போதிலும் கல்வியானது மக்களது தேவைகள் விருப்பங்களுடன் சம்பந்தப்பட்டவையாக இருக்க வேண்டும் என்ருர்.

சம்மேளனத்தின் கமிட்டி மெம்பர் அற்புதராஜ் பேசுகையில், தனியார் பள்ளிகளில் பாஸ் செய்யும் சிறுவர் சிறுமியர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 6–வது ஸ்டாண்டர்டில் இடம் கிடைப்பது கஷ்டமாக உள்ளது. ஆகையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 6–வது ஸ்டாண்டர்ட்டில் இன்னும் நிறைய ஆங்கில போதன மொழி பிரிவுகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று வற்புறுத்திஞர்.

சம்மேளனத்தைத் துவக்கிவைத்த நீதிபதி கே. நாராயணசாமி முதலியார், சிறுவர் சிறுமிகளிடம் கட்டணம் வசூலிக்கையில் பொது மக்களின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொள்ளும்படி தனியார் பள்ளிகளின் மானேஜர்களைக் கேட்டுக்கொண்டார்.

கமிட்டி மெம்பர் கே. கோவிந்தராவ் அனைவரையும் வரவேற்ருர், கமிட்டியின் மற்ெருரு மெம்பர் டி. தாமஸ் நன்றி கூறிஞர்.

## 60 பள்ளிகளுக்குமேல் மூடப்படலாம்: தமிழகக் கல்வி மந்திரி கூறுகிருர்

ஒவ்வொரு மாணவருக்கும் "அந்தரங்கக் குறிப்பேடு" ஒன்றை வைத்து வரலாம் என்று கல்வி மந்திரி திரு. நெடுஞ்செழியன் இன்று யோசனை தெரிவித்தார். மாணவர்களிடையே கட்டுப்பா

டின்மையையும், கிளர்ச்சியையும் தடுக்க இது துணைபுரியுமென்றார்.

ஒவ்வொரு மாணவர் சம்பந்தமாகவும் ஆரம்பப் பள்ளியிலிருந்து, கல்லூரி வரை அவர்களது படிப்பு, ஒழுக்கம் ஆகியவை பற்றிய குறிப்புக்களைக் கொண்டதாக அது இருக்க வேண்டும் என்றார் அவர்.

சென்னை நகர தலைமை ஆசிரியர்கள் மகாநாட்டின் இறுதி விழாக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து மந்திரி பேசினார்.

கிளர்ச்சியிலீடுபடும் மாணவர்களைக் கடுமையாக தண்டிக்க வேண்டுமென்றும், கல்வி ஸ்தாபனங்களில் வன்முறையைத் தடுப்பதற்கு இது ஒன்றுதான் வழி என்றும் திரு. நெடுஞ்செழியன் சொன்னார்.

மாணவர்களில் பெரும்பான்மையினர் அமைதியை விரும்புபவர்கள் என்றும், சாதாரணமாக சிலர் ஸ்தாபனங்களில் அமைதியைக் குலைப்பதில் ஈடுபடுகிறார்கள் என்றும், இவர்களை கல்வி ஸ்தாபன அதிகாரிகள் தக்கபடி தண்டித்தால், கிளர்ச்சிகளை சுலபத்தில் அடக்கிவிட முடியுமென்றும் கல்வி மந்திரி குறிப்பிட்டார்.

தொழில் பயிற்சிக் கல்வி ஸ்தாபனங்களில் புதிய மாணவர்களுக்குப் பழையமாணவர்கள் தொல்லை தரும் பழக்கம், சர்க்கார் கடும் நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அநேகமாக மறைந்துவிட்டது என்றார் மந்திரி.

கட்டுப்பாடின்மையையும், கிளர்ச்சிகளையும் தடுக்க தலைமையாசிரியர்களும், பிரின்சிபால்களும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும் அவர் உறுதி கூறினார்.

போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தால், தமிழ் நாட்டில் 60க்கு மேற்பட்ட பள்ளிகள்மூடப் படக்கூடும் என்ற தகவலை மந்திரி வெளியிட்டார். ஏராளமான பள்ளிகள் திறக்கப்பட்டிருப்பதன் விளைவே இது என்றார்.

பள்ளிகளுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு மானியத் தொகையை உயர்த்த வேண்டுமென்ற யோசனையை சர்க்கார் பரிசீலித்து வருகிறது என்றும் மந்திரி தெரிவித்தார்.

திரு. எஸ். நரசிம்மன் மந்திரியை வரவேற்றுப் பேசினார். திரு. பிராங்க் துரைசாமி வந்தனோபசாரம் கூறினார். நகரிலுள்ள 180 உயர் நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

## தீர்மானங்கள்

தமிழ் நாட்டிலுள்ள எல்லா பிரிவுகளையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இலவச வைத்திய வசதியளிக்குமாறு அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக் கொண்டது.

ஆசிரியர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும் தற்போது தரப்படும் சம்பள விகிதங்கள், திறமைசாலி

களை இத்தொழிலுக்கு ஏற்கக் கூடியதாயில்லையென்றும், எனவே குறைந்தபட்சம், கோத்தாரி கமிஷன் சிபாரிசு செய்துள்ள சம்பள விகிதங்களையாவது ஏற்க வேண்டுமென்றும் இம்மகாநாடு கோரியது. விலைவாசி உயர்வுக்கு ஏறிய ஈட்டுப் படியும் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

தற்போதுள்ள பாடத்திட்டங்களையும், பரீட்சை முறையையும் பரிசீலிப்பதற்காக, ஒரு கமிஷனை நியமிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக் கொண்டது.

பராமரிப்பு மானியத்தை உயர்த்த வேண்டும்: ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நூலக அதிகாரி, ஒரு ஆய்வுக் கூட உதவியாளர் நியமிக்கப்பட வேண்டும்; ஆசிரியர்களில்லாத ஊழியர்களுக்குட் சம்பளம், அலவன்ஸ் விஷயங்களில் ஆசிரியர்களுக்கு உள்ளது போன்ற பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்பவை இம்மகா நாட்டின் இதர கோரிக்கைகளாகும்.

—தினமணி

# நேரு பொன்மொழிகள்

[ தொகுப்பு: துரை. முருகேசன் ]

1. எந்த விதமான உண்மையான மாற்றத்தையும் வெளியிலிருந்து ஒரு சமூகத்தின்கீழ் திணிக்க முடியாது. அது தானாக வளர வேண்டும்.
2. ஒரு பெரிய நகரிலிருக்கும் கலைக் காட்சிச் சாலைகளும், பொருட் காட்சிச் சாலைகளும், வெளியேயுள்ள வாழ்க்கையின் விரிவான, செழிப்புள்ள, ஆழ்ந்த பொருள்களை எட்டிப் பார்ப்பதற்குரிய சாளரங்களாக விளங்குகின்றன.
3. செயல் இல்லாத வெறும் சிந்தனை சிதைந்த கருவைப் போன்றது. சிந்தனையில்லாத செயல் தவறாகும். எவனுடைய சிந்தனையும் செயலும் சேர்ந்து செயல்படுகின்றனவோ, அவனே தலை சிறந்த இன்பத்தை அடைபவன்.
4. ஒளி நிறைந்த பகலைக் காட்டிலும் இருளில்தான் தீமை துரிதமாகப் பரவுகிறது.
5. எத்தனைதான் உயர்ந்த பொருள்களும், பரிசுகளும் கிடைத்தாலும் மக்களின் அன்புக்கும், வாஞ்சைக்கும் மேலானது ஒன்றுமே இருக்க முடியாது.

—ஜவாஹர்லால் நேரு.

அனுபவக் கட்டுரை :

# மாணவனும் ஆசிரியனும்

— துறவி —

※

பள்ளி என்பது ஒரு கல்விக் கூடம் என்பது முன்னோரின் கருத்து. பள்ளி என்பது பிற்கால வருமானத்திற்குத் தயார் செய்யும் ஒரு தொழிற்சாலை என்பது இக் காலத்துத் தலைமுறையினரின் அசைக்க இயலாத உண்மை. என்ன செய்வது? காலம் இன்று அப்படி மாறிவிட்டது!

**இன்று :**

வகுப்பில் தனது மிரட்டல் உருட்டல்களுக்குப் பயந்து, தனது சொற்படி நடந்து தான் எந்தச் சமயம் வேண்டுமானாலும் கேட்கும் எத்தகைய கேள்விக்கும் பையன் பதில் சொல்லவேண்டுமென்பது வகுப்பாசிரியரின் நோக்கம். பையன் பள்ளிக்கு விடுமுறை எடுக்காமலும், தாமதமாக வராமலும், இடையிடையே வகுப்பை விட்டு வெளியே செல்லாமலும், போடுகின்ற சட்டத்திற்கு கட்டுப்பட்டு அமைதியாக இருக்கவேண்டுமென்றும், பள்ளிக்கூட காம்பவுண்டு சுவர் முழுவதும் தனது ஆட்சியின் கீழ் அடிபணிந்துநடக்க வேண்டும் என்பதும் பள்ளித் தலைமை ஆசிரியரின் எண்ணம். இவரது இந்த விதிகளுக்குப் பள்ளி ஆசிரியனும் விதிவிலக்கல்ல.

தேர்விற்கு வரக்கூடிய கேள்விகளின் பிரதி தன் கைக்கு முன் கூட்டியே கிடைத்து அதைமட்டும் படித்துத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் வாங்கவேண்டுமென்பதும், அப்படியும் படிக்க முடியாவிட்டால் திருட்டுத்தனமாகவாவது காப்பியடித்து 'மார்க்கு' வாங்கவேண்டுமென்பதும், காசு போட்டு வாங்கி வைத்திருக்கும் நோட்டுப் புத்தகங்களைக் கிறுக்கி பக்கத்தை நிரப்பி விட்டுத் தன்னுடைய கடன் இத்துடன் முடிந்தது என்று நினைத்து வாளாயிருப்பதும் மாணாக்கனின் கடமை.

இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என் மகன் வருடத்திற்கு வருடம் வகுப்பு மாறியாக வேண்டுமென்பது பெற்றோரின் அன்றாடப் பிரச்னை. கொஞ்சம் வசதியிருக்கும் பெற்றோரானால் இதற்காக நேரான வழியிலோ குறுகலான வழியிலோ பணத்தையும் கொட்டி இறைப்பார்கள். இதுதான் இன்று கல்விக்கும் பள்ளிக்கும் இருக்கும் முழுநிலை. அதற்குத் தகுந்தபடி பாடப்புத்தகங்கள் வேறு. ஒரே வரியில் சொல்லப் போனால் பள்ளி என்பது பாடப் புத்தகத்தைக் கரைத்துக் குடிக்கும் ஒரு உணவுச்சாலை என்றுதான் சொல்லவேண்டும்.

பாடப்புத்தகத்தால்தான் மாண

வனின் அறிவும், திறமையும், சக்தியும், புத்தியும் அடங்கியிருப்பதாக எல்லோருக்கும் எண்ணம். இந்தப் பாடப்புத்தகத்தை எப்படியாவது முடித்தாக வேண்டும் என்று ஆசிரியர் தலையில் அடித்துக்கொள்வார். இதைப் படித்துத் தொலைக்க வேண்டுமே என்று மாணவன் தலையில் அடித்துக்கொள்வான். இதை அடிக்கடி தொலைத்து விட்டு வந்து உயிரை எடுக்கிறானே என்று பெற்றோர் வயிற்றில் அடித்துக் கொள்வார். இதற்கிடையில் இந்த அக்கப்போரையெல்லாம், மாணவனின் தலையெழுத்தையெல்லாம் நிர்ணயிக்க 'தேர்வு' என்ற ஒரு மாபெரும் 'அணுகுண்டு' வேறு. (இதுபற்றிப் பிறகு விரிவாகப் பார்க்கலாம்.) இதுதான் உண்மையான பள்ளியா? அல்லது கல்வியா?—இல்லை.

கல்வி கற்பிப்பது என்பதும் கல்விக்கூடங்கள் வைத்து நடத்துவது என்பதும் ஒரு சேவை, தொண்டு என்றெல்லாம் இருந்த நிலைமாறி எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டன. இன்று கல்வியும், பள்ளியும் கடனுக்காக நடக்கின்றன—நடத்தப்படுகின்றன.

ஆனால் எது எப்படி இருந்தாலும், எக்கேடு கெட்டுப் போனாலும், பள்ளி பள்ளியாக, கல்வி கல்வியாக இருக்கவேண்டுமானால் அதற்கு முழுத்திறமையுடனும், முழுப்பலத்துடனும் உழைக்க வேண்டியது ஆசிரியன்தான்.

கல்வி என்பதன் நோக்கம் 'கற்றல்'.—'கற்றல்' என்பதன் பொருள் தேர்வுக்காகவோ, மதிப்பெண்ணுக்காகவோ அல்லாமல் மாணவன் அவனுடைய வாழ்க்கையை வாழ்வதற்காகவே. பாடபுத்தகத்தை மட்டுமல்லாது பல விஷயங்களையும் கற்க வேண்டும் என்பதுதான்.

'கல்வி என்பது மாணவனுக்குத்தான்'—ஆசிரியருக்கு அல்ல. சில ஆசிரியர்கள் மாணவர்களை மறந்து தங்களுக்காகவே பாடத்தை நடத்துவார்கள். தங்களது திறமையையும், சக்தியையும் ஒன்றுமறியாத மாணவர்களிடம் காட்டுவார்கள். மாணவர்களுக்குப் புலப்படாத புரிந்துகொள்ள முடியாத பல விஷயங்களைத் தாங்கள் தெரிந்து கொண்டுள்ளோம்—என்பதனைக் காட்டுவதற்காகவே மாணவர்களிடம் விளங்காத முறையில் போரடித்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் சிலர் பாடப் புத்தகத்தில் உள்ளதை மாணவனுக்குப் புரிந்ததோ இல்லையோ—அதை அவசியம் முடித்தாகவேண்டும் என்பதற்காகவே நடத்துவார்கள்.

பாடப்புத்தகம் மாணவனுக்கு வழிகாட்டவல்ல ஒரு உபகரணம் என்றுதான் ஆசான் கொள்ள வேண்டுமேயொழிய 'அதுவேதான் கல்வி' என்ற முடிவுக்கு வந்து மாணவர்களின் உயிரை எடுக்கக்கூடாது. எந்தப் பாடம், அல்லது எந்தப் பாடத்தின் பகுதி மாணவர்களுக்கு விளங்கிக்கொள்ளக் கூடியதாக இல்லையோ, எந்தெந்தப் பகுதி அவனது அறிவுக்கும், வயதிற்கும், திறமைக்கும், அப்பாற்பட்டதாகத் தோன்றுகின்றதோ, அதைத் தாராளமாக

விட்டுவிடலாம். ஏராளமாகக் கற்று ஒன்றும் இல்லாமல் போவதைவிடச் சிறிது படித்து கொஞ்சம் விளங்கிக் கொண்டாலே போதும் என்று நினைக்கவேண்டும்.

பாடப்புத்தகம் ஒன்றையே வேதவாக்காகக் கொள்ளாமல் வகுப்பில் மாணவர்களுக்கு ஆசிரியர் அன்றாட உலக நடப்புக்கள், அறிவியல், பொதுவியல், சமூகச் சிக்கல்கள், சமுதாயத்தின் பிரச்னைகள் இவற்றைப் போதிய அளவு போதிக்க வேண்டும். ஏனென்றால் பாடப் புத்தகமும், பாடப் பகுதிகள் அனைத்துமே மாணவனுக்குப் பிற்கால வாழ்க்கையில் பயன் கொடுக்காது. சுருங்கச் சொன்னால் மாணவனை ஆசிரியர் தேர்விற்கு தயார் செய்யாமல் வாழ்க்கைக்குத் தயார் செய்தல் வேண்டும்.

தேர்வின் நோக்கம், மாணவன் கற்றுள்ளதை மதிப்பிடுவதன் நோக்கமாயிருக்க வேண்டுமே யொழிய ஆசிரியரின் திறமையைச் சோதிப்பதற்காக இருக்கக் கூடாது.

பள்ளியில் ஆசிரியரிடம் மாணவன் இருக்கும் நேரத்தைவிட மற்ற இடங்களில், ஏன், அவன் சொந்த வீட்டில், சொந்தப் பெற்றோரிடம்கூட இருக்கும் நேரங்கள் மிக மிக குறைவாகும். அந்த அதிகப்படி நேரத்தில் ஆசிரியர் மாணவர்களை நல்ல முறையில் உருவாக்குவதில் செலவழிக்க வேண்டும். மாணவன் என்றால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட 'சர்க்கஸ்' மிருகம் என்று நினைக்கக் கூடாது. ஆசிரியரின் உணர்ச்சிகளுக்கு ஆசிரியர் அதிக இடம் கொடுப்பதைவிட மாணவர்களின் உணர்ச்சிக்கு ஆசிரியர் அதிக இடம் கொடுக்கவேண்டும். இதற்கு மாணவர்களுக்காகத்தான் ஆசிரியரே தவிர ஆசிரியர்களுக்காக மாணவன் அல்ல' என்ற உண்மையை ஆசிரியர் மறக்கக்கூடாது.

சில ஆசிரியர்கள், தான், தன் சொந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியாயிருந்தால், அதை மாணவர்களிடமும் பிரதிபலிப்பார்கள். தனக்குக் கஷ்டம் என்றாலோ, தன் வீட்டில் வேதனை என்றாலோ...அகப்பட்ட மாணவன் அன்றைக்குத் தொலைந்தான் என்றுதான் அர்த்தம்.

அடுத்து பள்ளியின் சட்டங்களும் திட்டங்களும் மாணவனுக்காகத் தான் இருக்க வேண்டுமே யொழிய சட்டங்களுக்கும், திட்டங்களுக்கும் தான் மாணவன் என்று இருத்தல் கூடாது. இது விஷயத்தில் ஆசிரியர் மனிதாபிமானியாக, மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

பள்ளி ஒரு சிறைச்சாலையாக இல்லாமல் ஒரு நந்தவனமாக இருக்க வேண்டும். சிரிக்க வேண்டிய நேரத்தில் சிரிப்பும், விளையாட வேண்டிய நேரத்தில் விளையாட்டும், கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பும் மிக அதிகமாக இருத்தல் வேண்டும். அதை விடுத்து பள்ளி முழுவதும் கட்டுப்பாடும், கட்டுக்காவலும் நிறைந்து இருக்கக் கூடிய காவல் நிலையமாக இருக்கக் கூடாது.

ஆசான் என்பவன் ஒவ்வொரு மாணவனின் உள்ளத்திலும் தெய்

மாக வைத்துப் போற்றப்பட வேண்டியவனேயொழிய மாணவர்கள் வெறுக்கும் அளவிற்கு ஆசான் நடந்து கொள்ளக் கூடியவனாக இருக்கக் கூடாது. வெறுப்புக்குள்ளானவர்கள் எது சொன்னாலும், எப்படிச் சொன்னாலும் அது யாருக்கும் ஏறுது. அப்படி எதுவும் ஏறியதுபோல் தோன்றினாலும் அது தற்காலிக ஏற்றம் தான் என்பதை உணர வேண்டும். பள்ளியில் ஆசான் கடூரமாயிராமல் எதிலும் அன்பாக இருத்தல் வேண்டும். ஆனால் இது பலன் கொடுக்க கொஞ்ச நாள் ஆகும். பள்ளிக் கூட ஆசிரியனுக்குப் பொறுமை மிக மிக அத்தியாவசியம்.

ஆசிரியர் என்பவர் மாணவனுக்குத் தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும், தோழனுக்குத் தோழனாகவும் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட உணர்ச்சிகளையும், சூழ்நிலைகளையும் நன்கு தெரிந்து கொண்டு அதன் படி நடக்கவேண்டும். இதெல்லாம் சாதாரணமாகச்செய்யக்கூடிய காரியமல்ல. இதைச் செய்வதற்கு ஆசிரியர் மாதா மாதம் வாங்கும் கூலியை ஒப்பிடக் கூடாது. ஆசிரியர் தொழில் சம்பளத்திற்கும், கூலிக்கும் அப்பாற்பட்டது. இன்னும் சொல்லப் போனால் மாணவனை நன்முறையில் உருவாக்கும் பொருட்டு ஆசிரியர் பல இன்னல்களையும், சோதனைகளையும், உணர்ச்சிகளையும், சொந்த விருப்புவெறுப்புகளையும் மேற்கொள்ளக் கூடிய ஒரு தியாக உருவமாக மாறவேண்டும். அப்பொழுதுதான் ஆசான் ஆசானாக இருக்க முடியும்.

இன்று வீட்டிலும், வெளி உலகத்திலும் மாணவர்கள் நடந்து கொள்ளும் சீர்கேடானநிலைமைக்கு ஆசிரியனே காரணம். எதனால் ...? ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் கல்வி அப்படி இருக்கின்றது. படிப்பைவிட மாணவனுக்கு ஒழுக்கமே தேவை—என்ற உயர்ந்த எண்ணத்துடன் மாணவனை ஆசான் கவனிக்கவேண்டும். இன்று பள்ளிக்கு வெளியே மாணவன் தவறினால் பிறர் கேட்கும் முதற் கேள்வி 'உங்களுக்கு யாருடா வாத்தியாரு? இப்படித்தான் சொல்லிக் கொடுத்தாரா '? என்பதுதான். ஆசான் எவ்வழி—மாணவன் அவ்வழி. காரணம் 'விதையொன்று போடச் சுரையொன்று முளைக்காது '. சமுதாயத்தில் மற்றைய உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருக்கும் மதிப்பைவிட ஆசானுக்கு அதிகம் உண்டு...? அதன் படி இருக்கிறதா...? இல்லை. காரணம் ஆசிரியர் தானாகதனக்குத் தேடிக்கொண்ட மதிப்பு.

இன்று உலகில் கற்றவர் அனைவருமே பள்ளி சென்று ஆசானிடம் கற்றவர்கள்தான். அதனால் ஆசிரியர்களைப் பற்றி உலகம் முழுவதும் நன்கு தெரியும். அந்த உலகம் முழுவதும் ஆசானிடம் அதிகமான அறிவையும், அடக்கத்தையும், உயர்வையும், பண்பையும எதிர் பார்க்கிறது. அதற்கு தக்கபடி ஒவ்வொரு ஆசிரியரும் நடந்து கொள்ளவேண்டும்.

—“ போதனு விஷய பூங்கொத்து.”

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.